# திசை மாறிய
# தீர்க்கதரிசி



பாஸ்டர் மா. ஜான்ராஜ்

# திசைமாறிய தீர்க்கதரசி

*பாஸ்டர் மா. ஜான்ராஜ்*

சீயோன் கோட்டை
சர்வதேச ஊழியங்கள்

வெளியிடுபவர்:
**உள்ளங்கை மேகம் பப்ளிகேஷன்ஸ்**
26/D, காந்தி ரோடு, பஸ் ஸ்டாண்டு மேற்குபுறம்,
சிவகாசி. 626123.
போன்: 0091-4562-230491
சபை: 0091-4562-277209
பேக்ஸ்: 0091-4562-230491
இமெயில்: pastor_m_johnraj@yahoo.com
Website : www.carmel.org.in

*திசைமாறிய தீர்க்கதரிசி*

புத்தக வரிசை : 8
ஆறாம் பதிப்பு : அக்டோபர் 2007
ஏழாம் பதிப்பு : ஜனவரி 2012
வெளியிடுவோர் : உள்ளங்கை மேகம் பப்ளிகேஷன்ஸ்
மொத்தப் பிரதிகள் : 1000
உரிமை : பாஸ்டர். மா.ஜான்ராஜ்
விலை : Rs. 25/-
வெளிநாடுகளில் 3 US. டாலர்கள்.

புத்தகங்கள் கிடைக்குமிடம் :

**இந்தியாவிலுள்ள அனைத்து கிறிஸ்தவ புத்தக நிலையங்களிலும் கிடைக்கும்.**

**To Buy Online**

**www.TamilChristianStore.in**

**புத்தக தேவைக்கும் புத்தக ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

**பாஸ்டர். மா. ஜான்ராஜ்**
**உள்ளங்கை மேகம் பப்ளிகேஷன்ஸ்**
**26.D, காந்தி ரோடு**
**சிவகாசி . 626123**
**அலுவலக போன் : 0091 4562 277209**

**செல்: 8870002009**

**To Buy Online:**
**www.tamilchristianstore.in**

# அணிந்துரை

**ச.கோ V. எசேக்கியா பிரான்ஸிஸ்,**

*பெராக்கா தீர்க்கதிரிசன ஊழியங்கள்,*

*சென்னை - 600 050.*

போதகர் ஜான்ராஜ் அவர்களை பல ஆண்டுகளாக நான் அறிவேன். உண்மை ஊழியரை இவர் பெரிதும் நேசிப்பார். கற்றுக் கொள்ளும் தாழ்மை உள்ளவர், கடின உழைப்பாளி. வேத வசனத்தில் ஊறினவர். பேச்சிலும், எழுத்திலும் தேறினவர். பரந்த ஞானமுள்ளவர். அனுபவசாலி. கர்த்தரால் கனம் பண்ணப்படுபவர். என் உள்ளம் இவரைக் குறித்து தேவனைத் துதிக்கிறது. இவர் தமது எழுத்துக்களால் என்னை அதிகமாக கவர்ந்து விட்டார்.

அபிஷேகம் பெற்றஊழியர் பலர் எழுத்து ஊழியத்தில் ஆர்வம் காட்டுவது இல்லையே என்பது என்னுடைய நெடிது நாள் பாரம். இதற்காகவும் கண்ணீரோடு ஜெபித்ததுண்டு. ஆவிக்குரிய உலகில் உள்ள இந்தக் குறைய நீக்க, கர்த்தர் இவர் மேல் எழுதும் அபிஷேகத்தை பொழிந்திருக்கிறார் என்பதைக் காணும் போது, எலிசபெத்தின் வயிற்றிலுள்ள பிள்ளை துள்ளினது போல எனது ஆவி மனிதன் ஆர்ப்பரித்து துள்ளுகிறான்.

ஆம் இவ்வுலகில் ஒரே முறைதான் நாம் பயணம் செய்கிறோம். காலச் சக்கரம் கண வேகத்தில் சுழலுகிறது. நமக்குக் கொடுத்த ஒவ்வொரு நிமிடமும் ஈடு செய்ய முடியாத விலையேறப் பெற்றபொக்கிஷம். நாம் செலவழிக்கும் மணித்துளிகளுக்கெல்லாம் எண்ணிக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்

அங்குமிங்கும் பாராமல், பெற்றுக்கொண்ட தரிசனத்தில் குறியாய் இருந்து, நெறியாய் ஓடி முடிக்க வேண்டிய நேரமிது. விழிப்போடும், உண்மையோடும், வாழ வேண்டிய காலமிது. ஆகையால் வேத வசனத்தில் பல மணி நேரங்கள் செலவிடுவோம். நமது சந்ததிகள் ஆசீர்வாதம் பெறும்படி எழுத்து ஊழியத்தில் ஆழமான ஆர்வம் காட்டுவோம்.

கர்த்தர் தாமே இப்புத்தகத்தைகயும், ஆசிரியரையும் ஆசீர்வதித்து கனப்படுத்துவாராக! ஆவிக்குரிய புத்தகங்களை பல எழுத அருள் புரிவாராக! ஆமென்

மிகுந்த ஜெபத்துடன்,
உங்கள் அன்பு சகோதரன்,
வ. எசேக்கியா பிரான்சிஸ், M.Com.,
ஸ்தாபகர்,
பெராக்கா தீர்க்கதரிசன ஊழியங்கள்,
1408, செக்டார் 1,
கோல்டன் காலனி, முகப்பேர்,
சென்னை 600 050.

# அர்ப்பணம்

எதிர்காற்று எப்பக்கமும் வீச
சுழல் காற்று சுற்றி சுற்றி வர
கொண்டல் காற்று கொடுமையாய் வீச
தப்பி வந்தான் தனித்து நின்றான்.

தரிசனம் அனலாக தளராது நடந்து
புயலெனப் புறப்பட்டான் புத்துணர்வு கொண்டு
இடியோசை யென யோனா முழங்க
அடியோடு மனந்திரும்பினர் அத்தனைபேரும்

அல்பா தேவன் அனுப்பி வைத்தார்
ஒமேகா தேவன் முடித்து வைத்தார்
யெகோவாயீரே இந்நூலைத் தந்தார்
இம்மானுவேலனாய் இப்புஸ்தகத்தோடு இருப்பவருக்கு

இந்நூல் அர்ப்பணம்...... சமர்ப்பணம்.

# பொருளடக்கம்


1. யோனா ஓர் அறிமுகம் 7

2. உண்மையான தீர்க்கதரிசி 16

3. திசை மாறிய தீர்க்கதரிசி 23

4. உணர்வுள்ள தீர்க்கதரிசி 36

5. தீர்க்கதரிசிக்கு ஓர் தீர்க்கதரிசி 47

6. திரும்பும் தீர்க்கதரிசி 54

7. தீரமுள்ள தீர்க்கதரிசி 64

8. தீழ்ப்பான தீர்க்கதரிசி 74

# யோனா - ஓர் அறிமுகம்

நான்கு அதிகாரங்களைக் கொண்ட யோனாவின் சரித்திரத்தை பரிசுத்த வேதாகமத்தில் குறைகண்டு பிடிக்கும் விற்பன்னர்கள் முக்கிய ஆதாரமாக எடுக்கின்றனர். யோனாவின் புஸ்தகம் ஒரு பாட்டி கதை என்று புரளி கிளப்புகிறவர்களும் உண்டு. ஆனால் வேத வாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டிருக்கிறது என்று விசுவாசிப்பவர்களுக்கு இது ஒரு அற்புதப் புஸ்தகமாகும்.

19ஆம் நூற்றாண்டில் சர் ஹென்றி லேயார்டு என்ற தொல்பொருள் ஆராய்ச்சியாளர் 35 முதல் 40 அடி ஆழத்திற்கடியில் நினிவேயின் இடிபாடுகளைக் கண்டு பிடித்து இவைகள் பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் நினிவே நகர்தான் என்று ஊர்ஜிதப் படுத்தியிருக்கிறார்.

## *1. யோனா - ஒரு சரித்திரப் புஸ்தகம் :*

இப்புஸ்தகத்தின் முதல் வசனத்திலேயே "அமித்தாயின் குமாரனாகிய யோனாவுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாகி" என்று காண்கிறோம். ஆகவே II ராஜா 14:25ல் "காத்தேப்பர் ஊரானாகிய அமித்தாய் என்னும் தீர்க்கதரிசியின் குமாரன் யோனா என்னும் தம்முடைய ஊழியக்காரன்" என்று பார்க்கிறோம். எனவே இவன் அமித்தாய் என்னும் தீர்க்கதரிசியின் மகன் என்றும் இவன் காத்தேப்பர் ஊரைச் சேர்ந்தவன் என்றும் தெளிவாகிறது.

யோனாவின் தீர்க்கதரிசனப் புஸ்தகம் சரித்திரப் பூர்வமானது என்பதை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் ஊர்ஜிதம் செய்துள்ளார். "இந்த பொல்லாத விபசார சந்ததியார் அடையாளத்தைத் தேடுகிறார்கள். ஆனாலும் யோனா

தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை" மத் 12:39.41 என்று இயேசுகிறிஸ்துவே யோனா ஒரு சரித்திரப் பூர்வமான மனிதன் என்று சாட்சி பகருகிறார்.

## *2. யோனா ஒரு எழுப்புதல் புஸ்தகம் :*

இப்புஸ்தகத்தில் எழுந்திரு (Arise) என்ற வார்த்தை மூன்று முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

"எழுந்திருந்து" உன் தேவனை வேண்டிக்கொள் (1:6) நீ "எழுந்து" மகா நகரமாகிய நினிவேக்குப் போ. (1:2) யோனா "எழுந்து" கர்த்தருடைய வார்த்தையின் படியே நினிவேக்குப் யோனான். (3:2)

"எழுந்திரு" என்ற வார்த்தை யோனாவுக்கு மட்டுமல்ல இன்று நமக்கும் எழுப்புதலைக் கொண்டு வருகிற வார்த்தையாகும். தூங்குகிற நீ மரித்தோரை விட்டு எழுந்திரு. கிறிஸ்து உன்னை பிரகாசிப்பிப்பார் எபே 5:14. என்று ஆவியானவர் நம்முடன் இப்புஸ்தகத்தின் மூலம் பேசப் போகிறார்.

அப் 12:7 பேதுரு "எழுந்தான்"உடனே அவன் கைகளிலும், கால்களிலும் உள்ள விலங்குகளும், சங்கிலிகளும் கழன்று விழுந்தன. மரணத்துக்கு குறிக்கப்பட்ட பேதுரு ஜீவனை சுதந்தரித்தான் சாத்தானின் சதியோசனைகள் தவிடு பொடியாயின. அகித்தோப்பேலின் ஆலோசனை அபத்தமானது போல் ஏரோதின் நரித் தந்திரங்கள் இல் பொருளாயின. பேதுருவைக் குறித்த தெய்வீகத் திட்டம் தொடர்ந்தது.

அற்புதங்களைக் கண்ட இயேசு கிறிஸ்து அசந்து தூங்கவில்லை. அதிகாலையில் இருட்டோடே எழுந்து புறப்பட்டு வனாந்திரமான ஓரிடத்திற்குப் போய் அங்கே ஜெபம் செய்தார். (மாற்கு 1:34, 35) தொடர்ந்து அற்புதங்கள் நடந்து கொண்டே இருந்தது. சாத்தானின் கிரியைகள் அழிக்கப்பட்டது.

மத்தேயு எழுந்து இயேசுவுக்குப் பின் சென்றான். மத் 9:9 வரிவசூலிப்பதில் ஜனங்களை வஞ்சித்து ஆயிரமாய் அள்ளிக்குவித்த மனிதன் அன்பரின் அழைப்பை அசட்டை செய்யாமல் அப்பொழுதே அவர் பின் ஊழியத்திற்கு சென்றான் என்றால் அது பெரிய எழுப்புதல் செயல்தான்.

**பேதுரு எழுந்தார் அற்புதம் பெற்றார்**

**இயேசு எழுந்தார் ஜெபித்தார்**

**மத்தேயு எழுந்தார் மன்னவன் சேவைக்கு புறப்பட்டார்**

**யோனா எழுந்தார் ஜெபிப்பதற்காக**

**யோனா எழுந்தார் நினிவேக்குச் செல்ல**

**யோனா எழுந்தார் சுவிசேஷம் பிரசங்கித்தார்.**

யோனா தீர்க்கதரிசி ஒரு எழுப்புதல் தீர்க்கதரிசிதான். இப்புஸ்தகம் வாசிக்கும் அன்பு நண்பரே உம்முடைய சபையில் என்ன நடந்து கொண்டிருக்கிறது? நீர் என்ன செய்து கொண்டிருக்கிறீர்? நீங்களும் ஒரு எழுப்புதல் மனிதர் என்று சாட்சி பெறுங்கள். அதுவே உங்களைக் குறித்த தேவ நோக்கம் எழுந்து பிரகாசியுங்கள்.

## *3. யோனா - பாவியை நேசிக்கும் புஸ்தகம் :*

யோனா தீர்க்கதரிசி இஸ்ரவேலில் பிறந்து, வளர்ந்து, ஜீவித்தார். நினிவே நகரம் டைகிரீஸ் நதியின் கரையில் இருந்தது. நினிவே அசிரியாவின் தலைநகர். நினிவே பாபிலோனை விட பெரிய பட்டணம். அசிரியா ராஜாக்கள் பலமுறை பாலஸ்தீன தேசத்திற்கு படையெடுத்து வந்தவர்கள் இஸ்ரவேலை நிந்தித்தவர்கள். ஜீவனுள்ள தேவனின் பகைவர்கள்.

ஆனாலும் இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவன் மன்னிக்கிறதில் தயை பெருத்தவர். நினிவேக்கு மன்னிப்பு கொடுக்க சித்தம் கொண்டார். தெய்வீக திட்டத்திற்கு எதிராக

செயல்பட்டவர்களையும் இரட்சிக்க தேவன் விரும்பினார். எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார். (I பேதுரு 3:9) என்ற தேவனின் மாறா பிரமாணம் பழைய ஏற்பாட்டு நாட்களிலும் இழையோடுகிறதைக் காண்கிறோம்.

இப்புஸ்தகத்தின் செய்தியை வாசிக்கும் நீங்கள் கூட உங்கள் அருகில் உள்ள உங்கள் சத்துருக்களை நேசிக்கவும் அவர்களுக்காக ஜெபிக்கவும் கடமைப் பட்டுள்ளீர்கள் என்பதை மறக்கக் கூடாது.

*"துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம்"*

என்பது மற்ற மார்க்கத்தாரின் நீதியாகும். ஆனால் இயேசு கிறிஸ்துவோ துஷ்டர்களை அழிக்க அல்ல. இரட்சித்து தேவபிள்ளையாய் மாற்றுவதே இயேசு கிறிஸ்துவின் தெய்வீகம் தன்னைக் காட்டிக் கொடுத்த யூதாஸை முத்தமிடுவதும், தன்னைத் தெரியாது என்று சொல்லி மறுதலித்த, சபித்த, சத்தியம் செய்த பேதுருவையும் ஒரே பார்வையில் உயிர்ப்பித்து, புது வாழ்வு அளிக்கும் மீட்பரல்லவோ நம் ஆண்டவர். இப்புஸ்தகத்தை வாசிக்கப் போகும் நீங்களும் நம் அருகில் உள்ள பாவிகள் மேல் பாசமும், நேசமும், மனதுருக்கமும் உடையவர்களாய் மாறுவோமாக.

## 4. யோனா பாரம்பரியங்களை பட்சிக்கும் புஸ்தகம் :

வேதாகம நாட்களில் எழுப்புதலைக் குறித்த தவறான அபிப்பிராயம் ஜனங்களுக்குள் இருந்தது. அதுவும் வேதபாரகர் பரிசேயர்கள் அதிகமாக பாரம்பரியத்தில் பற்றுக் கொண்டவர்கள், எழுப்புதல் எங்களுக்குகே உரியது என்று மார்தட்டினார்கள். எழுப்புதல் எருசலேமிலிருந்து தான் வர வேண்டும். எருசலேமே எழுப்புதலின் பிறப்பிடம் என்பது பரிசேயனின் பாரம்பரியம். கலிலேயாவிலிருந்து ஒரு தீர்க்கதரிசியும் எழும்புகிறதில்லை என்பதை ஆராய்ந்து பாரும் (யோவான் 7:52) என்று பரிசேயர் பிடிவாதம் செய்தார்கள்.

ஆனால் எழுப்புதல் எருசலேமில் அல்ல. யூதேயாவிலும் அல்ல. கலிலேயாவிலிருந்து வந்தது. (*Northen Kingdom]* இயேசு கிறிஸ்து கலிலேயாவிலிருந்து வந்த தீர்க்கதரிசி (யோவான் 7:41) என்று அழைக்கப்பட்டார். யோனா தீர்க்கதரிசியும் வடதிசை ராஜ்யமாகிய கலிலேயாவைச் சேர்ந்தவர். இயேசு கிறிஸ்து மூலம் உலக எழுப்புதல் உண்டாயிற்று. யோனா மூலம் நினிவே முழுவதும் எழுப்புதல் உண்டாயிற்று.

இன்றும் கூட இப்படித்தான் நடக்கின்றது. எழுப்புதல் பாரம்பரிய சபைகளில் அல்ல. பரிசுத்த வெளிப்பாடுகள் உள்ள மிகவும் சிறியவர்கள் மூலம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அன்பு நண்பரே கோலியாத்தை வீழ்த்த சிறு தாவீது போதும். யுத்தத்தில் பழகிய, அப்பியாசம் அதிகம்படித்த சவுலாலும், பட்டயம் பிடித்து கையில் ஒட்டிப் போகும் அளவுக்கு வீசும் அப்னேரும் வீழ்த்த முடியாத கோலியாத்தை எழுப்புதல் வீரன் தாவீது வீழ்த்தி விட்டான். எழுப்புதல் இஸ்ரவேலிலே வந்தது. யோனா பாரம்பரியங்களைப் பட்சித்தது போல் நாமும் சகல பாரம்பரியங்களையும் விட்டு விலகுவோமாக.

## *5. யோனா-மிஷனரி புஸ்தகம் :*

யோனாவின் தீர்க்கதரிசன புஸ்தகம் மிஷனரி தரிசனமுள்ள புஸ்தகமாகும். மிஷனரி தரிசனம் இல்லாதவர்கள் கிறிஸ்தவர்கள் அல்ல. மிஷனரிகளை அனுப்பாத அல்லது மிஷனரிகளை ஜெபத்தாலோ, காணிக்கைகளாலோ தாங்காத சபைகள் தேவனுடைய சபைகளாகாது. வேதாகம சபைகள் மிஷனரி தரிசனம் உடையவைகளாயிருந்தன. எருசலேமிலிருந்து மிஷனரிகள் எங்கும் சிதறிச் சென்றனர். எருசலேம் சபைகள் மூலம் எத்தியோப்பியா வரைக்கும் சுவிசேஷம் சென்றது. சமாரியா வரைக்கும் சுவிசேஷம் பரவியது.

அந்தியோகியா சபையின் மூலம் அகில உலகம் முழுவதும் மிஷனரிகள் சென்றார்கள். பல சபைகள் ஸ்தாபிக்கப்பட்டது. யோனா தீர்க்கதரிசி மாற்றுக் கலாச்சாரம் உள்ள மாற்று மொழி

பேசும் மக்கள் மத்தியில் அனுப்பப்பட்டார். டைகிரீஸ் நதிக்கரையில் உள்ள நினிவே பட்டணம் பாலஸ்தீன தேசத்திலிருந்து சுமார் 1900 கிலோமீட்டர் தூரத்திலிருந்தது, என்பது வேதப் பண்டிதர்களின் கருத்து.

**Expect Great things**

**attempt great things**

***பெரிய காரியங்களை எதிர்பார்***

***பெரிய காரியங்கள் செய்திடு.***

என்பது தான் இந்தியாவிற்கு மிஷனரியாக வந்த வில்லியம் கேரியின் பொன்வாக்காகும்.

38 மொழிகளில் வேதாகமத்தை மொழி பெயர்த்திருந்தார். 6 இந்திய மொழிகளுக்கு இலக்கணம் எழுதினார். கல்கத்தாவில் வேதாகம பல்கலைக்கழகம் ஏற்படுத்தினார். இந்தியாவின் எல்லா வேதாகமக் கலாசாலைகளுக்கும் அதுவே முதன்மையாகவும், மூத்ததாகவும் திகழ்கிறது. செருப்பு தைக்கும் தொழிலாளி ஒருவர் இவ்வளவு பெரிய காரியங்களை செய்தார் என்றால் அவரை அழைத்த தேவன் பெரியவர். பெரியகாரியங்களைச் செய்தார். அருமையானவர்களே! தேவன் பட்சபாதமில்லாதவர். மாறாதவர் உங்களைக் கொண்டும் பெரிய காரியங்களை சாதிக்க தேவன் விரும்புகிறார். இடங்கொடுப்போமாக!

## *6. யோனா அற்புத புஸ்தகம் :*

யோனாவின் தீர்க்கதரிசனப் புஸ்தகத்தில் "ஆயத்தப்படுத்தப் படுத்தியிருந்தார்" என்ற வார்த்தை நான்கு முறை வருகிறது.

**1:17 பெரிய மீனை ஆயத்தப்படுத்தியிருந்தார்.**

**4:6 ஆமணக்குச்செடியை ஆயத்தப்படுத்தியிருந்தார்**

**4:7 பூச்சியை ஆயத்தப்படுத்தியிருந்தார்.**

**4:8 கீழ்க்காற்றைஆயத்தப்படுத்தியிருந்தார்.**

என்று ஆங்கில வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ளது. மூன்று நாள் இரவும் பகலும் மீனின் வயிற்றில் இருந்த யோனா மறுபடியும் மீனால் வாந்தி பண்ணப்பட்டு நினிவேயின் கரையில் உயிருடன் வந்து விடுவாரானால் இது பெரிய அற்புதம்.

ஒரே நாளில் ஒரு ஆமணக்குச் செடி முளைத்து வளர்ந்து யோனாவுக்கு நிழல் கொடுக்கும் மரமாக உயர்ந்திருந்தது என்றால் அது தேவனின் இரண்டாவது அற்புதமாகும். ஊழியக்காரனுடைய சுகத்தை விரும்பும் தேவனல்லவா நம்தேவன்.

தேவனால் அனுப்பப்பட்ட பூச்சி ஆமணக்குச்செடியின் இலை முழுவதையும் தின்று தீர்க்கதரிசியின் தீழ்ப்பு நீங்குவதற்கு தேவனுக்கு ஒத்துழைத்தது என்பது மூன்றாவது அற்புதமாகும்.

தேவன் சொல்ல ஆகும் தேவன் கட்டளையிட நிற்கும் அவர் சொற்படி செய்யும் பெருங்காற்று என்றல்லவா சங்கீதக்காரன் சொல்கிறார். காற்றை தமது பண்டகசாலையிலிருந்து புறப்படப் பண்ணுகிறவர். (சங் 148:8) தீர்க்கதரிசிக்கு இரக்க சிந்தையும், மனதுருக்கமும், வரும்படி அவர் தலையில் உஷ்ணக் காற்று வீசும்படி தேவன் சொல்ல அவைகள் அப்படியே கீழ்ப்படிந்தது என்பது நான்காவது அற்புதமாகும்.

நினிவேயின் இரட்சிப்புக்காக நான்கு அற்புதங்களை ஆயத்தப்படுத்தினவர் இன்று நமக்கும் ஏராளமான அற்புதங்களை ஆயத்தப்படுத்தியுள்ளார். தேவபிள்ளையே தேவனுக்காக வாழ்ந்துவிடு. தேவனுடைய பட்சத்தில் நில் உனக்காக மூடு திரைக்கு அப்புறத்தில் அற்புதங்கள் நிறைந்திருக்கிறது. தேவனுடைய வேளை வரும் போது மூடுதிரைகள் அகலும். அற்புதங்கள் மேல் அற்புதம் உங்களுக்கு நிகழும். இப்புஸ்தகம் கூட உங்கள் கையில் திகழ எங்களுக்கு ஒரு அற்புதம் செய்தார் நம் தேவன். அற்புதமாக இதன் செலவுகளுக்கு ஒருவரே உதவி செய்தார். உங்களுக்கும் அற்புதம் செய்வார்.

### *7. யோனா - மணவாட்டியின் புஸ்தகம் :*

யோனா என்றபெயருக்கு புறா என்பது அர்த்தமாகும்.

மணவாட்டியை மணவாளன் இயேசுகிறிஸ்து "என் புறாவே என் உத்தமியே!" என்று அழைக்கிறார். (உன் 2:14) உண்மைசீஷன் எவனும் புறாவைப்போல் இருக்க வேண்டும் என்று இயேசு கிறிஸ்து சொன்னார் ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறது போல இதோ நான் உங்களை அனுப்புகிறேன். ஆகையால் சர்ப்பங்களைப் போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப் போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள். (மத் 10:16) என்கிறார். கபடு பிசாசின் குணம். கபடு நீங்கி ஜீவிப்பது தான் தெய்வீக வாழ்க்கை.

எனவே யோனா தீர்க்கதரிசி புறா என்று சாட்சி பெற்றது போல் இப்புஸ்தகத்தின் செய்திகள் உங்களை புறாவைப் போல் மாற்றும் என்பது நிச்சயம். திறந்த மனதுடன் படியுங்கள். மணவாட்டியாக மறுரூபம் அடைய தேவன் உங்களுக்கு உதவி செய்வார்.

# 2. உண்மையான தீர்க்கதரிசி

நம்முடைய தேவன் உண்மையுள்ளவர். நாம் உண்மை யில்லாதவர்களாய் இருந்தாலும் அவர் உண்மையுள்ளவர். ரோமர் 3:4 தேவன் சத்தியபரர். தேவனுடைய சபையானது சத்திய நகரமாகும். தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் தேவனைப் போலவே உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். உண்மையுள்ள மனுசன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்.

தீர்க்கதரிசியாகிய யோனா உண்மையுள்ளவர் என்று விளங்குகிறது. இவர் ஊழியம் செய்த நாட்களில் இஸ்ரவேலிலே யெரோபெயாம் *II* ஆட்சி செய்திருக்கிறார். இந்த ராஜா யெரோபெயாம் *I* ஐ போலவே தேவனுக்கு துரோகியாய் வாழ்ந்திருக்கிறார். விக்கிரக ஆராதனை செய்து வழி விலகிப் போயிருக்கிறார். அப்பொழுது யோனா தீர்க்கதரிசி தீர்க்கதரிசனம் உரைத்து ராஜாவுக்கு ஆலோசனைகள் சொல்லியிருக்கிறார்.

யோனா தீர்க்கதரிசியின் தீர்க்க தரிசன ஊழியத்தினால் யெரோபெயாம் *II* ஆசீர்வதிக்கப்பட்டார். காத்தேப்பேர் ஊரானாகிய அமித்தாய் என்னும் தீர்க்க தரிசியின் குமாரன் யோனா என்னும் தம்முடைய ஊழியக்காரனைக் கொண்டு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லியிருந்தபடியே அவன். ஆமாத்தின் எல்லை முதற்கொண்டு சமபூமியின் எல்லை மட்டுமுள்ள இஸ்ரவேலின் எல்லைகளைச் சேர்த்துக் கொண்டான். *II* ராஜா 14:26

இஸ்ரவேலின் உபத்திரம் கொடிது என்றும், அடைபட்டவனு மில்லை. விடுபட்டவனுமில்லை. இஸ்ரவேலுக்கு ஒத்தாசை செய்கிறவனுமில்லை என்றும் கர்த்தர் பார்த்தார். இஸ்ரவேலின் பேரை வானத்தின் கீழிலிருந்து குலைத்துப் போடுவேன் என்று கர்த்தர் சொல்லாமல் யெரோபெயாமின் கையால் அவர்களை இரட்சித்தார். *II* ராஜா 14:27, 28.

இத்தனை பெரிய ஆசீர்வாதத்தின் பாதுகாப்பு இஸ்ரவேலுக்கு கிடைத்ததற்கு காரணம் யோனா தீர்க்கதரிசியின் தீர்க்கதரிசன ஊழியத்தினால் தான்.

கர்த்தர் தன்னை வைத்த சிறிய ஊரில் உண்மையாய் ஊழியம் செய்தார். யோனாவின் மூலம் வடதிசை ராஜ்யமாகிய இஸ்ரவேல் ஆசீர்வதிக்கப்பட்டது. எனவே தான் கொஞ்சத்தில் உண்மையுள்ளவன் அநேகத்தின் மேல் அதிகாரியாய் வைக்கப்படுவான் என்ற தேவ வார்த்தையின் படி (மத் 25:21) தன் சொந்த ஊரில் உண்மையாய் ஊழியம் செய்ததால் வெளிநாட்டிற்கும் மற்றபட்டணங்களுக்கும் யோனா கர்த்தரால் அனுப்பப்பட்டார். உண்மையுள்ள மனுசனை உயர்வு தேடி வரும்.

கொஞ்சத்தில் உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான். கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான். அநீதியான உலக பொருளைப் பற்றி நீங்கள் உண்மையுள்ளவர் களாயிராவிட்டால் யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள். (லூக் 16:10,11).

தேவன் நம்மிடத்தில் நூறுரூபாய் கொடுக்கும் போது அதில் உண்மையாய் செயல்படுவோமானால் மட்டுமே விலையேறப் பெற்ற கிருபைகளையும், வரங்களையும் தேவன் தருவார்.

10 விசுவாசிகளை தேவன் நமக்குத் தரும் போது அவர்களுக்கு வேதபாடக் கூட்டம் ஆராதனை, வீடுசந்திப்பு இவைகளில் உண்மையாய் இருந்தால் பத்தாயிரம் விசுவாசிகளை தருவார்.

அன்பு ஊழியரே! தேவன் உங்களை வைத்த இடத்தில் உண்மையாய் ஊழியம் செய்யுங்கள். பையைத் தூக்கிக் கொண்டு பட்டணத்தை நோக்கி ஓடாதிருங்கள். மற்றசபையாரையும் பெயர்க்கிறிஸ்தவர்களையும் வீடு சந்தித்து நேரத்தை வீணாக்காதிருங்கள். நீங்கள் உண்மையாய் இருந்தால் உயர்வு உங்களைத் தேடி வரும். உயர்வை நீங்கள் தேடிப் போகத் தேவையில்லை.

சில விசுவாசிகளுக்கு ஆசீர்வாதம் ஏன் கிடைக்கவில்லை? அவர்கள் உண்மையாய் இல்லாததினால் தான். சிறியசம்பளம் வரும்போது உண்மையாய் இருங்கள். பெரிய சம்பளம் வரும் போதும் உண்மையாய் இருங்கள். உங்கள் ஸ்தல சபைக்கும் மேய்ப்பருக்கும் உண்மையாய் இருங்கள். இராயனுக்கு உரியதை இராயனுக்கும் தேவனுக்குரியதை தேவனுக்கும் செலுத்துங்கள். உயர்வு உங்களைத் தேடி வரும்.

தீழ்ப்பானதிலிருந்து விலையேறப் பெற்றதை பிரித்தெடுப்பவனே உண்மையான தீர்க்கதரிசி. (எரே 15:19) யோனா தீர்க்கதரிசி பாவத்தைக் கண்டிக்க பயப்படவில்லை. தேவனை அசட்டை செய்த தாவீது ராஜாவை நாத்தான் தீர்க்கதரிசி கடிந்து கொண்டார்.

***தீழ்ப்பு எது?***

***விலையேறப் பெற்றது எது?***

என்று எடுத்துச் சொல்பவனே உண்மையான தீர்க்கதரிசி, துணிகரங்கொண்ட ஏரோதை துணிச்சலுடன் கடிந்து கொண்டார். யோவான் ஸ்நானகன் உண்மை தீர்க்கதரிசியின் உள்ளம் உரம் கொண்டதாயிருக்கும். சிங்கங்கள் நரியின் ஊளையிடுதலுக்கு பயப்படாதல்லவா?

பரிசுத்தமானதற்கும், பரிசுத்தமில்லாததற்கும் தீட்டானதற்கும் தீட்டல்லாததற்கும் இருக்கும் வித்தியாசத்தை என் ஜனத்துக்கு போதித்து அவர்களுக்குத் தெரியப்பண்ணக் கடவர்கள் (எரே 44:23) என்று சாதோக்கின் புத்திரராகிய லேவியரென்னும் ஆசாரியர்களுக்கு தேவன் கட்டளை கொடுத்துள்ளார்.

யோனா தீர்க்கதரிசி தன்னை தேவன் வைத்துள்ள உள்ளூர் சபையிலே உண்மையுள்ளவராய் இருந்தபடியால் தேவன் அவரை உயர்த்தினார். நினிவேக்குச் செல் என்றார். யோனா 1:1,2. நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய் அதற்கு விரோதமாய் பிரசங்கி அவர்களுடைய அக்கிரமம் என் சமூகத்தில் வந்து எட்டினது என்று தேவன் சொன்னார்.

## *கிராமமா? பட்டணமா?*

யோனா தீர்க்கதரிசி கிராமத்திலிருந்தார். இப்பொழுது பட்டணத்திற்கு அனுப்பப்படுகிறார். உள்ளூரில் ஊழியம் உண்மையாய் செய்தார். வெளிநாட்டுக்கு தேவனால் அனுப்பப்பட்டார். வெளியூர்களுக்கும், வெளிநாடுகளுக்கும் சுயமாய்ப் போவோரும் உண்டு. தேவனால் அனுப்பப்பட்டு போவோரும் உண்டு. தேவனால் நாம் அனுப்பப்படுவோமானால் குறிப்பிட்ட திட்டவட்டமான தேவனுடைய ஊழியம் நம்மைக் கொண்டு தேவன் செய்து விடுவார். யோனா தேவனால் அனுப்பப்பட்ட படியால் ஒரே பிரசங்கத்தில் 1,20,000 பேர் இரட்சிக்கப்பட்டார்கள். அல்லேலூயா!

தேவனுடைய பிள்ளையே! தேவன் உங்களை வைத்திருக்கும் உள்ளூர் சபையின் முன்னேற்றத்திற்காய் சபையின் வளர்ச்சிக்காய் உண்மையாய் ஒத்துழையுங்கள். தேவன் உங்களை நிச்சயமாய் ஆசீர்வதிப்பார். உங்கள் சரீரம் சபையில் அமர்ந்திருக்கும் போதும் உங்கள் உள்ளான மனுசன் முழு உலகத்தையும் சுற்றி வராதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள். தேவன் தமது சபையைக் கட்டுகிறார். மத் 16:18. நீங்களும் அவரது சபையைக் கட்டுங்கள் தேவ ராஜ்யத்தைக் கட்டுங்கள். உங்கள் ராஜ்யத்தை தேவன் கட்டுவார். தேவன் பொறுப்பெடுப்பார்

## *மகா நகரம் :*

யோனா தீர்க்கதரிசி அனுப்பப்பட்ட பட்டணம் நினிவேயாகும். இந்தப்பட்டணம் அசீரியாவின் தலைநகர். இது பூர்வீகப் பட்டணம். பாபிலோனுக்கு 280 மைல்களுக்கு அப்பால் டைகிரீஸ் நதியின் கரையில் அமைந்துள்ளது. இப்பட்டணத்திற்கு திருடர்களின் பட்டணம் (*The Robber City)* என்று பெயரும் உண்டு. ஏனென்றால் இவர்கள் மற்ற பட்டணங்களுக்கு படையெடுத்து சென்று தேசத்தைக் கொள்ளையடித்து தங்கள் பட்டணத்தின் செல்வத்தைப் பெருக்கி ஐசுவரியவான் களானார்கள். எசேக்கியா ராஜாவின் நாட்களில் நினிவே

பட்டணத்தின் ராஜா சனகெரிப் படையெடுத்து வந்தது வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது திருடர்களின் பட்டணம் என்பது மட்டுமல்ல. இது அழகான பட்டணம் (*Colourful City)* என்றும் அர்த்தமாகும். இப்பட்டணத்தில் அழகிருந்தபடியால் ஆபத்துகளும் இருந்தன. இவர்களுடைய பாவம் தேவனுடைய சமூகத்தை எட்டியது. இவர்களின் பாவத்தை தேவனால் பொறுத்துக் கொள்ள முடியாமல் நியாயந்தீர்த்து அழிக்க தேவன் எண்ணியபடியால் அதற்கு முன்பு எச்சரிக்கை செய்யும் படியாக யோனாவை அனுப்பினார். ஏவாளின் வீழ்ச்சிக்கு காரணம் விருட்சத்தின் அழகுதான்.

கி.மு.. 612ல் மேதியர்களாலும், பாபிலோன் ராஜாக்களாலும் நினிவே அழிக்கப்பட்டது. அழிந்து போன நினிவேயை கி.பி. 1845ல் ஹென்றி ஆஸ்டின் என்பவர் ஆராய்ச்சி செய்து சில குறிப்புகளை எழுதியுள்ளார். நினிவேயின் அலங்கம் 81/2 மைல்கள் சுற்றளவில் கட்டப்பட்டிருந்ததாம். நினிவேக்குள் 1800 ஏக்கர் அளவில் இரண்டு பெரிய குன்றுகள் அதன் முகப்பில் இருந்ததாம். தெற்கே உள்ள குன்று நூறு அடி உயரமிருந்ததாம். இது 40 ஏக்கர் பரப்பளவு உள்ளதாம். வடக்கே உள்ள குன்று 90 அடி உயரமும் 100 ஏக்கர் பரப்பளவும் உள்ளதாக இருந்ததாம்.

இந்த இரு குன்றுகளையும் இணைத்து பெரிய கதவும் வாசலும் இருந்ததாம். இந்த வாசலில் சிறகுகள் விரித்த இரண்டு சிங்கங்கள் சிலைசெய்து இருந்ததாம். இந்த இரண்டு சிங்கங்களுக்கும் நடுவாக உள்ளே போனால் நினிவேயின் ராஜா சனகெரிப்பின் அரமனையிருந்ததாம். அரண்மனையின் முகப்பில் இரண்டு காளைகளில் சிறகுகள் விரித்தது போல் சிலைகள் இருந்ததாம். ராஜாவின் நடைமண்டபம் 40 அடி அகலம் 180 அடி நீளமுள்ள தாயிருந்ததாம். அதற்குப்பின்னே 2 மைல் பரப்பளவுள்ள மண்டபத்தில் அசீரிய ராஜாக்களின் வெற்றிகளை விளக்கும் படங்கள் சுவர்களில் மாட்டப்பட்டிருந்ததாம். *(Thomson chain refference Bible - Page 1681)* இப்பட்டணத்தின் இயற்கை

வளங்களுக்கு காரணம் இதன் கீழ்புறத்தில் ஓடும் டைகிரீஸ் நதியாகும். இத்தனை சிறப்புகள் உள்ள பட்டணத்தில் பாவம் பெருகியிருந்தது. எனவே தேவன் அதை அழிக்காமல் இரட்சிக்க விரும்பி தீர்க்கதரிசியாகிய யோனாவை அங்கு அனுப்பினார்.

நம் தேசத்துக்கும் இரட்சிப்பும் பாதுகாப்பும் தேவ பிள்ளைகளால் தான் வர முடியும். நம் தேசத்தில் எல்லோரும் நிம்மதியாக தூங்க வேண்டுமானால் தேவ ஜனங்கள் இன்று ஜாமக்காரராக விழித்திருக்க வேண்டும்.

# 3. திசைமாறிய தீர்க்கதரிசி

தேவன் பேசுகிறார். தமது தெய்வீக திட்டத்தை மனிதனுக்கு வெளிப்படுத்துகிறார். தமது திட்டத்தை நிறைவேற்ற தேவ தூதர்களை தேவன் பயன்படுத்துவதோ, எதிர்பார்ப்பதோ இல்லை. மண்ணான மனுசனைக் கொண்டு தமது இரட்சிப்பின் திட்டத்தை தேவன் நிறைவேற்றுகிறார்.

புற ஜாதியினருக்கு இரட்சிப்பு கொடுக்க விரும்பிய தேவன் கொர்நேலியுவின் வீட்டுக்கு தேவ தூதர்களை அனுப்பினார். ஆனால் தேவ ஆலோசனைகளை பேதுருவின் மூலமே வெளிப்படுத்தி, கொர்நேலியுவின் வீட்டாரை தேவன் இரட்சித்தார். அபிஷேகம் செய்தார். பணிவிடை செய்யத்தான் தேவ தூதர்களை தேவன் பயன்படுத்துகிறார். ஆனால் இந்தக் கனமான ஊழியத்தை செய்ய பலவீனமான மனிதர்களையே தேவன் பயன்படுத்துகிறார்.

இஸ்ரவேலின் வடதிசை ராஜ்யத்தில் யோனாவைக் கொண்டு தமது பரிசுத்தமான ஊழியத்தை நிறைவேற்றிய ஆண்டவர் யோனாவுக்கு ஒரு *transfer* கொடுத்தார். "நினிவேக்குப் போ" என்றார் நம் தேவன். ஆனால் யோனாவோ தர்ஷீசுக்குப் போகும்படி எழுந்து யோப்பாவுக்குப் போய் தர்ஷீசுக்கு போகிற ஒரு கப்பலைக் கண்டு கூலி கொடுத்து கப்பல் ஏறினார். 1:3.

இந்த யோப்பா *Jaffa* என்று இன்று அழைக்கப்படுகிறது. இந்த *Jaffa* துறைமுகத்திலிருந்து தான் யோனா *England* செல்வதற்கு (தர்ஷீஸ்) டிக்கெட் வாங்கி இருக்கிறார். (அன்றைய தர்ஷீஸ் இன்றைய இங்கிலாந்து ஆகும்). இந்த தர்ஷீஸ் இஸ்ரவேல் தேசத்திற்கு நேர் மேற்காக அமைந்துள்ளது.

யோனாவை தேவன் போகச் சொன்ன நினிவேயோ நேர் கிழக்கு திசையில் உள்ளது. கிழக்கே செல்ல வேண்டிய தீர்க்கதரிசி மேற்கே சென்று கொண்டிருக்கிறார். தேவ சத்தத்துக்கு

கீழ்ப்படியாதவர்களை பின்மாற்றக்காரர்கள் என்று நாம் அழைக்கிறோம். ஆனால் தேவனோ, தமது சத்தத்துக்குக் கீழ்ப்படியாதவர்களை தமது எதிரிகள் என்றே அழைக்கிறார். காரணம் என்னவென்றால் எதிர் திசையில் செல்பவன் எதிரிதானே.

தேவபக்தியா? தேச பக்தியா? யோனா தீர்க்கதரிசி எதிர் திசையில் ஏன் ஓடினார்? ஜெபத்துடன் ஆராய்ந்தால் விடை கிடைக்கின்றது. யோனாவின் உள்ளத்தில் தேவ பக்தியை விட தேசபக்தி தான் அதிகம் உறங்கிக் கிடக்கின்றது. தேவன் போகச் சொல்கின்ற தேசமோ தன் தாய் நாட்டிற்கு எதிரிகள். பலமுறை தன் தாய்நாட்டின் மீது படையெடுத்து வந்து இஸ்ரவேலுக்கு துன்பம் கொடுத்தவர்கள். எனவே தான் மன்னிப்பின் சுவிசேஷம் சுமந்து செல்ல யோனாவுக்கு மனம் இல்லை.

இன்றும் பல கிறிஸ்தவர்களிடையே தேவபக்தியை விட தேச பக்தி அதிகம் இருப்பதைக் காணமுடியும். பெங்களூருக்கு ஒரு முறை நான் கூட்டங்களில் செய்தி கொடுக்க அழைக்கப்பட்டேன். மூன்று நாட்கள் நான் அங்கு தங்கியிருந்து ஊழியம் செய்த போது அங்குள்ள போதகர் என்னிடம் பேசும் போதெல்லாம் நமது தேவனை விட "திருவள்ளுவரை" அடிக்கடி புகழ்ந்து கொண்டார். நமது வேதத்தை தெரிந்து வைத்திருப்பதை விட தமிழ் இலக்கியங்களை அதிகம் தெரிந்து வைத்திருந்தார். தமிழ் இலக்கியங்களின் மேன்மையையே அதிகம் அடிக்கடி பேசினார். இப்படிப்பட்டவர்கள் தேவ பக்தியை விட தேச பக்தியை அதிகம் உடையவர்கள் தான்.

இன்னும் பலர் இரகசியமாக அரசியல்வாதிகளை புகழ்ந்து கொண்டு அரசியல் கட்சிகளோடு நேசம் உடையவர்களாய் இருக்கிறார்கள். தேசத்திற்கு நேரம் செலவழிப்பதை விட இவர்கள் அரசியல் வார இதழ்களுக்கு அதிக முக்கியத்துவமும், நேரமும் கொடுக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்கள் பிரசங்க நேரத்தில் தங்களையும் அறியாமலே தங்கள் அரசியல் அபிமானிகளின் பெயர்களையோ, கட்சிகளையோ, விமர்சித்து விடுவார்கள். இப்படிப்பட்ட யோனாக்களுக்கு தேவபக்தியை விட தேச

பக்திதான் அதிகம். இவர்களின் முடிவு, மார்க்கம் தப்பி அலைகிற நட்சத்திரங்கள் என்ற பட்டியலில் சேர்க்கப்படுவார்கள். யூதா - 13.

அன்பானவர்களே! நாம் நேசிக்கச் சிறந்த புத்தகம் பரிசுத்த வேதாகமம் ஒன்றே. நம்முடைய நேசர் ஒருவரே. நான் நேசருடையவள். என் நேசர் என்னுடையவர். என்ற பிரதிஷ்டை நமக்கு வேண்டும். அப்பொழுது நமது பக்தி தேச பக்தியாக இராமல் தேவபக்தியாக மட்டும் செயல்படும்.

## *திசைமாறியதின் விளைவுகள்:*

யோனா தீர்க்கதரிசி தன் ஊழியத்தில் திசைமாறினார். இதனிமித்தம் கர்த்தருடைய சமூகத்தினின்று விலகினார் என்று மூன்றுமுறை சொல்லப்பட்டுள்ளது. 1:3; 1:3; 1:10 ஆகிய மூன்று இடங்களிலும் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. கர்த்தருடைய சமூத்தினின்று விலகி ஓடுகிறவன் என்ற வார்த்தைக்கு புறஜாதி மார்க்கத்தார் மிகவும் பயந்தார்கள் (1:10). ஆனால் யோனாவுக்கு பயமே இல்லை. இதனிமித்தம் 7 விதமான இழப்புகளை நஷ்டங்களை யோனா சந்திக்க வேண்டியிருந்தது.

## *1. எதிர்ப்பு :*

கர்த்தர் சமுத்திரத்தின் மேல் பெருங்காற்றை வரவிட்டார். 1:4. கர்த்தருடைய சமூகத்தைவிட்டு ஓடுகிறவன் முதலாவது எதிர்ப்புகளை சந்திக்க நேரிடும். எதிர்காற்று யோனாவின் பிரயாணத்தை தடுத்தது. வாழ்க்கைப் பாதையை கடினமாக்கியது. சாலொமோன் ஞானி தேவனை விட்டு விலகின போது எதிரிகள் எப்பக்கத்திலும் எழும்பினர். எதிரிகள் எழும்பினால் நிம்மதி, சமாதானம் இருக்க முடியாது. சமாதானத்தை எடுத்துப் போடுவது அந்திக் கிறிஸ்துவின் ஆவியாகும். வெளி 6:4. சாலொமோன் ஆட்சியில் அமர்ந்த ஆரம்ப நாட்களில் அவருடைய அனுபவமோ சமாதானம் நிறைந்த நாட்களாயிருந்தது.

"இப்பொழுதோ தேவன் எங்கும் எனக்கு இளைப்பாறுதலைத் தந்தார். விரோதியும் இல்லை. இடையூறும் இல்லை. ஆகையால்

என் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயம் கட்ட வேண்டும் என்று எழும்பினார்." I ராஜா 5:4, 5 கட்டி முடித்தார்.

ஆனால் சாலொமோன் தேவசமூகத்தை விட்டு விலகிய பின்பு

1. ஏதோமியனாகிய ஆதாத் என்னும் விரோதி எழும்பினான். I ராஜா 11:14

2. ரேசோன் என்னும் வேறொரு விரோதியை தேவன் எழுப்பினார். I ராஜா 11:23

3. யெரோபெயாம் என்னும் ஊழியக்காரனும் ராஜாவுக்கு விரோதமாகக் கையெடுத்தான். I ராஜா 11:26

4. கர்த்தர் சாலொமோன் மேல் கோபமானார். I ராஜா 11:10. இவ்விதமாக எதிர்ப்புகள் ஏராளமாய் எழும்பியது. சாலொமோன் சமாதானத்தை இழந்தார்.

அன்பு தேவனுடைய பிள்ளைகளே! ஆவிக்குரிய வாழ்க்கையிலும், ஊழியத்திலும் எதிர்ப்புகள் எழும்பும் போது நமது இருதயம் இறுமாப்பு கொள்ளக்கூடாது. கடந்த கால வாழ்வின் வெற்றிகளை மனதில் நினைத்துக் கொண்டு நிகழ்கால எதிர்ப்புகளை லேசாக எடுத்துக் கொள்ளக் கூடாது. எதிர்ப்புகள் எழும்புகிறதானால் தனிமையில் ஜெபத்திலும் உபவாசத்திலும் நேரத்தை செலவிட்டு ஜனங்களுக்கு மத்தியில் தாழ்மையுடன் நடந்து கொள்வோமானால் எதிரிகளையும் நமக்கு நண்பர்களாக்கி தருவார்.

## *2. கொந்தளிப்பு :*

இவ்வுலகம் தேவனுடைய கரத்தில் உள்ளது. இயற்கைகள் இயேசு கிறிஸ்துவின் கை அசைவில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தண்ணீர்களைத் தமது கைப்பிடியால் அளப்பவர். ஏசா 40:12. அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும். தேவன் தமது ஊழியர்களுக்கும் தம்முடைய பிள்ளைகளுக்கும் இயற்கையை அனு

கூலமாக்குவார். இயற்கை நமக்கு ஊழியம் செய்யும்.

யோனாவின் வாழ்விலோ இயற்கையும் எதிராக செயல்பட்டது. வேதாகமம் நாட்களில் மத்திய தரைக்கடல் பெரிய சமுத்திரம் என்று அழைக்கப்பட்டது. இன்றும் மத்திய தரைக்கடல் ஆழமானது என்று Bible Atlas சொல்கிறது. எதிர்காற்று பலமாய் அடித்ததால் கடலிலே கப்பல் உடையுமென்று நினைக்கத் தக்கதாக பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று. (யோனா 1:4)

தேவனுடைய பிள்ளைகளே! தேவ ஊழியர்களே! நாம் தேவ கட்டுப்பாட்டிற்குள் நின்று ஜீவிப்போமானால் இயற்கையானது நமது கட்டுப்பாட்டிற்குள் கீழ்ப்படிந்து செயல்படும். யோசுவா சூரியனை நிறுத்தினார். எலியா வானத்தைப் பூட்டினார். மழை பெய்யவில்லை. வானத்தை திறந்தார். மழை பெய்தது. இயேசு கிறிஸ்துவும் இரையாதே அமைதலாயிரு என்று சமுத்திரத்தை அதட்டினார் சமுத்திரம் அடங்கியது. அமர்ந்தது. நம் தேவன் இயற்கையின் மேல் ஆளுகை உள்ளவர். ஆதாமுக்கும் இயற்கையின் மேல் தேவன் தமது ஆளுகை தந்திருந்தார். பாவத்தினால் ஆளுகையை இழந்தான். இன்று இயேசு கிறிஸ்து மூலம் மறுபடியும் ஆளுகையை அடைந்திருக்கிறோம். இயேசு கிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவோம் என்பது அதிக நிச்சயமாமே. ரோமர் 5:17.

யோனா தேவ சமுகத்தை விட்டு ஓடுவதால் இயற்கை கொந்தளித்தது. யோனா செல்லும் கப்பல் உடையுமளவுக்கு கொந்தளிப்பு கூடியது. பின்மாற்றக்காரன் ஒருவன் நிமித்தம் கப்பலில் உள்ள எல்லோரும் கொந்தளிப்பை சந்திக்க வேண்டியதாயிற்று.

ஒரு ஆகான் மூலம் முழு சபைக்கும் தோல்வி. ஒரு யோனா மூலம் கப்பலில் உள்ள அனைவருக்கும் கொந்தளிப்பு. தேவ பிள்ளையே! உன்மூலம் சபையிலும் உன் ஊரிலும் கொந்தளிப்பா? அல்லது சமாதானமா? ஒரு யூதாஸ் நிமித்தம் அனைத்து சீஷர்களும் சிதறி ஓட வேண்டிய நிர்ப்பந்தம்.

ஆனால் யாக்கோபு நிமித்தம் லாபானின் வீட்டுக்கு ஆசீர்வாதம். யோசேப்பினிமித்தம் போத்திபாரின் வீட்டுக்கு ஆசீர்வாதம். ஆதி 39:5. அன்பு நண்பர்களே! நீங்கள் எந்த ரகம்? உங்கள் மூலம் மற்றவர்களுக்கு கொந்தளிப்பா? அல்லது உங்கள் மூலம் உடன் இருப்பவர்களுக்கு ஆசீர்வாதமா?

### *3. பொருள் நஷ்டம் :*

தேவபிள்ளைகளின் ஒவ்வொரு பைசாவும் விலையேறப் பெற்றவை. சிறிய ஐந்து பைசா பெரிய ஊழியத்தை நடத்தி விட முடியும். சில மீன்களும் சில அப்பங்களும் பல ஆயிரங்களை போஷித்து திருப்தி படுத்த முடியும். தாவீதின் கையில் உள்ள ஒரு கூழாங்கல் பெலிஸ்தரை வீழ்த்தி விட முடியும். எனவே நமது கையில் தேவன் கொடுக்கும் பொருளாதாரம் மிகுந்த ஆசீர் வாதத்திற்குரியது. விதவையின் வீட்டில் உள்ள கொஞ்சமாவும் சிறிது எண்ணெயும் தேவ ஆசீர்வாதத்தால் 1 1/2 வருடத்திற்கு போதுமானது. குறைவேயில்லை. இதுவே தேவ ஒழுங்கு.

தேவ பிள்ளைக்கு திரளான பணம் தேவையில்லை. தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட கொஞ்சப் பணம் பெரிய காரியங்களை நிறைவேற்றி முடிக்கும். துன்மார்க்கனுக்கு இருக்கும் செல்வத் திரட்சியைப் பார்க்கிலும் நீதிமானுக்குள்ள கொஞ்சமே நலம்.

யோனா சென்ற கப்பலில் உள்ள சரக்குகள் எல்லாம் கடலிலே எடுத்து எறியப்பட்டன. பாரத்தை லேசாக்கினால் உயிர் பிழைக்கலாம் என்பது மாலுமிகளின் நம்பிக்கை. தேவ பிள்ளைகளின் பணம் வீணாகுவதும், விரயமாய் செலவழிக்கப்படுவதும் தாங்கிக் கொள்ள முடியாத வேதனையாகும். என் அருமை சகோதரர்களே! உடன் ஊழியர்களே! உங்களுக்குப் பொருள் நஷ்டம் வரக்கூடாது. தேவ சமூகத்தில் சரியாய் நிற்கும் தேவ பிள்ளைகளுக்கு பொருள் நஷ்டம் வராது.

கடந்த நாட்களில் நாங்கள் ஊழியத்தில் கர்த்தர் கொடுக்கும்

பணத்தைக் கொண்டு ஜெப வீடுகள் கட்டியிருக்கிறோம். நாங்கள் செலவழித்து கட்டிய ஜெப வீடுகளை இரண்டு மடங்கு தொகையாக மற்ற மக்கள் மதிப்பிடுகிறார்கள். காரணம் என்னவென்றால் நமது பொருளாதாரம் ஆசீர்வதிக்கப் பட்டதாகும். பொருள் நஷ்டத்திற்கு இடமேயில்லை. யோனா தேவ சமூகத்தை விட்டு ஓடுவதால் பொருள் நஷ்டம் உண்டாயிற்று.

### 4. கீழான வாழ்வு :

தேவ சமூகத்தை விட்டு விலகி ஓடுகிறவன் மேன்மை அடைய முடியாது. முன்னேற முடியாது. ஜெயம் பெற முடியாது. தலைவர்களாக உயர முடியாது. யோனாவோவென்றால் கப்பலின் கீழ்த்தளத்தில் இறங்கிப் போய் படுத்துக் கொண்டான். கப்பலின் கீழ்த்தளத்தில் சரக்குகள் இருந்தது. அந்த சரக்குகளோடு கோதுமை மூடை, உப்பு மூடை இன்னும் பலவித பொருட்கள் இருந்திருக்கும். அவற்றின் மத்தியில் இறங்கிப் போய் படுத்துக் கொண்டான். தேவ மனிதன் முதல் வகுப்பில் பிரயாணம் செய்திருக்க வேண்டும். யோனாவோ மூன்றாம் வகுப்பையும் இழந்து சரக்குகளோடு படுத்துக் கொண்டார்.

ஒரு முறை அடியேன் பெங்களூருக்கு எங்கள் கிளை சபைக்கு ஊழியத்திற்கு சென்றேன். ஊழியம் முடித்துவிட்டு சிவகாசி திரும்புவதற்காக மெஜஸ்டிக் பஸ்ஸ்டாண்ட் வந்தேன். ஒரு பஸ்ஸிலும் டிக்கெட் கிடைக்கவில்லை. ரயிலிலும் டிக்கெட் கிடைக்கவில்லை. இங்கும் அங்கும் அலைந்த பின்பு நேரம் கடந்து கொண்டே போகிறது. இரவு 8 மணியாகி விட்டது. மறுநாள் கிறிஸ்துமஸ் பண்டிகையான படியால் பஸ்ஸ்டாண்டு முழுவதும் அதிகக் கூட்டம்.

முடிவாக கலாசிபாளையம் பஸ்ஸ்டாண்டுக்குப் போனேன். அங்கிருந்து சிவகாசிக்கு இரவு 9 மணிக்கு ஒரு பஸ் புறப்படும். அதில் போய் டிக்கெட் கேட்டேன். அதிர்ச்சி தரும் செய்திதான் பதிலாக வந்தது 35 இருக்கைகள் உள்ள பஸ்ஸில் 50 பேர் டிக்கெட் எடுத்துள்ளார்கள். 36வது எண்ணிலிருந்து 50வது எண் வரை

டிக்கெட் எடுத்தவர்கள் சீட்டுகளுக்கு இடையில் உள்ள நடைபாதையில் உட்கார்ந்து கொள்கிறோம் என்று டிக்கெட் எடுத்திருந்தார்கள்.

முடிவாக நானும் 51வது ஆளாக டிக்கெட் எடுத்து பஸ்ஸுக்குள் சென்றேன். எல்லோரும் கீழே நின்று ஜாலியாக பேசிக் கொண்டிருந்தார்கள். பஸ்ஸுக்குள் சென்ற நான் கொஞ்ச நேரமாவது அதாவது ஒரு இருக்கையில் அமர்ந்து ஓய்வெடுப்போம் என்று யோசித்தேன்.

ஆவியானவர் என்னுடன் பேச ஆரம்பித்தார். "பூமியும் அதன் நிறைவும் கர்த்தருடையது. உலகமும் அதில் உள்ள குடிகளும் கர்த்தருடையது". சங்24:1 என்றார். உடன் ஆவிக் குள்ளாகி ஜெபித்தேன். அந்நியபாஷைகளில் பேசினேன். கர்த்தர் சொன்னார் 14ஆம் எண் இருக்கையில் உட்கார் என்றார். உட்கார்ந்தேன்

பஸ் புறப்படும் நேரம் வந்தது எல்லோரும் தாங்கள் முன்பதிவு செய்த இருக்கைகளில் அமர்ந்தார்கள். 36ஆம் எண்ணிலிருந்து 50வரை எண்ணுள்ளவர்கள் கீழே உட்கார்ந்தார்கள். என் இதயம் அங்கலாய்க்க, தொடர்ந்து நான் ஆவிக்குள் ஜெபித்துக் கொண்டிருந்தேன். டிக்கெட் பதிவு செய்தவர் வண்டியில் ஏறினார். என்னிடம் காதில் வந்து இரகசியமாக சொன்னார். சார் நீங்கள் அமர்ந்திருக்கும் 14ஆம் எண் இருக்கைக்குரியவர் இப்பொழுது தான் வந்து டிக்கெட்டை ரத்து செய்து, பணத்தைப் பெற்றுக் கொண்டார். இப்பொழுது இந்த இருக்கையை 36வது எண் டிக்கெட் உள்ளவருக்குத் தான் கொடுக்க வேண்டும். ஆனாலும் 51 வது டிக்கெட் எடுத்திருக்கும் உங்களை கீழே உட்கார்ந்து செல்லுங்கள் என்று சொல்ல எனக்கு மனமில்லை என்று சொல்லிவிட்டு You are lucky man என்று சொல்லி கைகுலுக்கி விட்டுப் போனார்.

"தமது ஊழியக்காரனுடைய சுகத்தை விரும்புகிற தேவன் சங் 35:27 என்ற வசனம் அப்படியே என்னில் நிறைவேறியது. தேவ சமூகம் நம்மில் இருக்குமானால் நல்ல பிரயாணத்தை தருவார்.

இரவு முழுவதும் நல்ல நித்திரையும், சரீரத்திற்கு இளைப்பாறுதலோடு ஊர் வந்து சேர்ந்தேன். மறுநாள் பகலில் கிறிஸ்மஸ் ஆராதனைக்காக நன்றாக ஜெபிக்க முடிந்தது.

அன்பு தேவனுடைய பிள்ளைகளே! தேவ சமூகத்தை காத்துக் கொள்ளுங்கள் நமது வாழ்க்கையில் பிரயாணம் இனிதாயிருக்கும். தேவ சமூகத்தை இழந்து போனால் வாழ்வு கீழான நிலைக்குப் போய்விடும்.

## *5.மனதிலும் சரீரத்திலும் சோர்வு :*

தேவ சமூகத்தை விட்டு விலகி ஓடுகிறவனுக்கு மனதில் சோர்வு உண்டாகும். அதினிமித்தம் சரீரமும் சோர்வு அடைந்து விடும். யோனாவோ அயர்ந்த நித்திரை செய்கிறார். மனதிலும், சரீரத்திலும் சோர்வடைந்தவர்களைக் கண்டுபிடிக்க எளிய முறை உண்டு. அது தான் நித்திரைப் பிரியம்.

எலியா சோர்ந்த பொழுது சூரைச்செடியின் கீழ்படுத்துக் கொண்டு நித்திரை செய்தான். சிலர்களின் உள்ளம் சோர்வடைந்த பொழுது அதிகம் தூங்கினார்கள். சாதாரண நித்திரை அல்ல. அயர்ந்த நித்திரை செய்தார் யோனா.

மனிதனுக்கு தூக்கம் அவசியம் தான் ஆனால் மற்றவர்கள் தூங்குகிறது போல நாம் தூங்கக் கூடாது. (I தெச 5:6) கப்பலில் உள்ள அனைவரும் உயிர் பிழைப்பதற்காக தேவனை நோக்கி கூப்பிட வேண்டிய, ஜெபிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் போது யோனா தூங்கினார். எனவே தூங்க வேண்டிய நேரம் தூங்குவது நல்லது தான். ஆனால் ஜெபிக்கவேண்டிய நேரத்தையும் தூக்கத்தில் செலவழிப் போமானால் அது தவறு குற்றம், மனதிலும் சரீரத்திலும் சோர்ந்து போனவர்களுக்குத்தான் ஜெபிக்க வேண்டிய நேரத்திலும் தூக்கம் வரும். தேவ பிள்ளையே உங்கள் ஜெபநேரம் எதற்குப் போகிறது. ஜெபத்திலா? தூக்கத்திலா?

எழுந்திருந்து உன்தேவனை நோக்கி வேண்டிக் கொள். (1:6)

என்று மாலுமி யோனாவைப் பார்த்துச் சொன்னார். தேவ பிள்ளையே! தேவஊழியரே! நாம் எழுந்து பிரகாசிக்க வேண்டிய நேரம் வந்து விட்டது. இனி நாம் தூங்கக்கூடாது. ஜெபித்தால் ஜீவன் தப்பும். ஜெபிக்காவிட்டால் ஜல சமாதியாகி விடுவோம் என்று ஜனங்கள் உணர்ந்து விட்டார்கள். சபையாரே நாம் உணர்ந்து விட்டோமா?

## *6. குட்டு வெளிப்படும்:*

தேவ சமூகத்தை விட்டு விலகி ஓடும் யோனா தீர்க்கதரிசி தேவனுடைய பார்வையில் நாம் மறைந்து ஒளிந்து விட்டோம் என்று நினைத்தார். சபையாரும் நம்மைப் பார்க்கவில்லை என்று நினைத்தார். எவ்வளவு பெரிய புத்திசாலித்தனமான கெட்டிக் காரனுடைய சுட்டித் தனங்களும் எட்டாம் நாளில் வெளிப்பட்டு விடும். தேவனை அறியாத அவிசுவாசிகள் மத்தியில் யோனாவின் பின்மாற்றம் வெளிப்பட்டது. தேவன் காட்டிக் கொடுத்தார். தீர்க்கதரிசியின் மதிகேட்டைத் தடுப்பதற்காக.

தேவ பிள்ளையே! தேவ ஊழியரே! நம்முடைய தேவன் இருளில் மறைந்திருக்கிறவைகளை வெளியரங்கமாக்கி சகல இருதயத்தின் யோசனைகளையும் வெளிபடுத்துவார். (I கொரி 4:5)

யார் நிமித்தம் இந்த ஆபத்து நேரிட்டதென்று நாம் அறியும் படிக்கு சீட்டுப்போடுவோம் வாருங்கள் என்று ஒருவரோ டொருவர் சொல்லிக்கொண்டு சீட்டுப்போட்டார்கள். யோனாவின் பேருக்கு சீட்டு விழுந்தது. ஆயிரக்கணக்கானோர் பிரயாணம் செய்யும் கப்பலில் யோனாவின் பேருக்கு சீட்டு விழுந்தது என்றால் தேவன் பின்மாற்றக்காரர்களைக் காட்டிக் கொடுக்கிறார் என்பது நிச்சயமாக விளங்குகிறது.

எனதருமை ஊழியர்களே!, விசுவாசிகளே! தேவனுக்கு பயந்து வாழ்வோம். அப்படியானால் மனுசருக்கு முன்பாக தலை நிமிர்ந்து நடக்க நமது மனச்சாட்சியிலே தைரியம் உண்டாகும். தேவனுடைய சபையும் ஒரு விசுவாசக் கப்பல்தான். இந்த விசுவாசக் கப்பலில் உள்ளோர் யாராகிலும் (Iதீமோ1:19)

நல்மனச்சாட்சியைத் தள்ளிவிட்டு விசுவாசமாகிய கப்பலை சேதப்படுத்தினால் தேவன் காட்டிக் கொடுப்பார். இமெனேயும், பிலேத்தும் அப்படிப்பட்டவர்கள் என்று அப்போஸ்தலன் பவுலும் கண்டு கொண்டார். இனம் காட்டுகிறார். எனவே தேவ சமூகத்தை விட்டு ஓடினவர்கள் நிரந்தரமாக மறைந்து கொள்ள முடியாது. தேவன் உங்களை காட்டிக் கொடுக்கும் முன்பே! ஜனங்கள் உங்களைக் கண்டு பிடிக்குமுன்னே தேவ சமூகத்தை நோக்கி ஓடி வாருங்கள்.

## *7. கைவிடப்படுவீர் :*

தேவ சமூகத்தை விட்டு ஓடுபவனின் முடிவு கடைசியாக எல்லாராலும் கைவிடப்படுவார்கள். அவர் கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி ஓடிப்போகிறவன் என்று தங்களுக்கு அறிவித்ததினால் அந்த மனுஷர் பயந்தார்கள். யோனாவை எடுத்துச் சமுத்திரத்தில் போட்டு விட்டார்கள். (யோனா 1:15)

கப்பற்காரர் அந்த கப்பலைக் கரை சேர்க்கும்படி தண்டு வலித்தார்கள். ஆனாலும் சமுத்திரம் வெகு மும்முரமாய்க் கொந்தளித்துக் கொண்டிருந்தபடியால் அவர்களால் கூடாமற் போயிற்று. 1:13.

அன்பு தேவ பிள்ளைகளே, ஊழியர்களே! தேவ சமூகம் உங்களோடு இருந்தால் ஒரு நாளும் நீங்கள் கைவிடப்டுவதில்லை. உன்னைவிட்டு விலகுவதில்லை. உன்னைக் கைவிடுவதுமில்லை என்பது தான் தேவனின் வாக்குத்தத்தம். (யோசுவா 1:5 ஆதி 28:15)

தேவனுடைய பிள்ளைகள் ஒரு நாளும் கைவிடப் படுவதில்லை. ஆனால் யோனாவோ எல்லாராலும் கைவிடப் பட்டார். சமதரையில் கைவிடப்பட்டாலும் பரவாயில்லை. யோனாவோ சமுத்திரத்தில் கைவிடப்பட்டார். தேவனால் கைவிடப்பட்ட யோனாவை மனிதர்கள் காப்பாற்ற எண்ணினார்கள். அவர்களால் முடியவில்லை.

தேவனுடைய பிள்ளை போர்க்குதிரைபோல் முன்னேற

வேண்டியவர்கள். துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிற தில்லை (*II*கொரி4:8) என்பது தான் பரிசுத்தவான்களின் அனுபவம் யோனாவின் பரிதாபநிலைகள் 7ஐயும் தியானிக்கையில் பவுலின் ஜெயவார்த்தைகளைக் கவனிப்போம்.

★ நாங்கள் ஒடுங்கிப்போகிறதில்லை

★ நாங்கள் மனமுறிவடைகிறதில்லை

★ நாங்கள்கைவிடப்படுகிறதில்லை

★ நாங்கள் மடிந்து போகிறதில்லை

★ நாங்கள் சோர்ந்து போகிறதில்லை *II* கொரி 4:8,16

ஒரு ஊழியக்காரனின் வாழ்க்கை பவுலின் வாழ்க்கைப் போன்றது. யோனாவின் வாழ்க்கை போல் அல்ல தேவ ஜனங்களே நம்முடைய மேன்மையெல்லாம் நம்மை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினால் தான். தேவ சமூகம் உங்களோடு உண்டா? அல்லது தேவ சமூத்தை விட்டு ஓடுகிறீர்களா?

# 4. உணர்வுள்ள தீர்க்கதரிசி

தேவ சமூகத்தை இழந்த மனுசன் திரும்பவும் தேவ சமூகத்தைப் பெற்றுக் கொள்ள தேவையானது பலத்த உணர்வுதான். உணர்வு வந்தவுடன் புத்தியில் தெளிவு வந்துவிடும். புத்தியில் தெளிவு வந்தவுடன் பாவ அறிக்கையும் ஒப்புரவாகுதலும் உண்டாகும். உடனே அப்பா வீட்டிற்கு ஆவலாய் திரும்பி வர வாஞ்சை உண்டாகும். தகப்பனும் கழுத்தைக் கட்டி கொண்டு முத்தம் செய்வார். விருந்து கொண்டாடுவார். சபையிலும், பரலோகத்திலும் மகிழ்ச்சி பொங்கி விடும்.

தேவ சமூகத்தை இழந்த யோனாக்களே உணர்வடையுங்கள்.

★ வசனத்தை கேட்டவுடன் உணர்வடையுங்கள். மத் 13:23

★ ஆவியானவரால் உணர்வடையுங்கள் யோவா 16:8

★ தீர்க்கதரிசனத்தினால் உணர்வடையுங்கள் II சாமு 12:7

★ ஜெபத்தினால் உணர்வடையுங்கள் சங் 19:12.

யோனா தீர்க்கதரிசி உணர்வடைந்தார். தேவ திட்டத்திற்குள் மறுபடியும் கொண்டு வரப்பட்டார் பயன்படுத்தப்பட்டார். அழிய வேண்டிய தீர்க்கதரிசி தன்னையும் காத்து ஒருதேசம் முழுமையும் அழியாமைக்குள்ளும் நித்திய ஜீவனுக்குள்ளும் நடத்தினார். II தீமோ 1:10

யோனா உணர்வடையாமல் இருந்திருந்தால் அவர் சரித்திரம் முடிந்திருக்கும். நரகத்திற்கும் போயிருப்பார். இந்தப் பெரிய கொந்தளிப்பு என்னிமித்தம் உண்டானது (யோனா 1:12) என்று உணர்வோடு அறிக்கையிட்டார்.

ஆவியானவர் சபையில் பேசும் போது தேவபிள்ளையே

இந்த வார்த்தை யாருக்கோ? என்று சும்மாயிராதீர்கள். ஆவியானவர் விருதாவாய்ப் பேசுவதில்லை. நாம் உணர்வடைகிறோமா? யோனா உணர்வடைகிறதற்கு அவரிடம் ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டன. அதன்மூலம் யோனா உணர்வடைந்து எழுப்புதல் பெற்று எழும்பினார்.

**1. யார் நிமித்தம் இந்த ஆபத்து நமக்கு நேரிட்டது?**

**2. உன் தொழிலென்ன?**

**3. நீ எங்கேயிருந்து வருகிறாய்?**

**4. உன் தேசம் எது?**

**5. நீ என்ன ஜாதியான்?** யோனா 1:8

கர்த்தரின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாததினால் தன்னிடம் இந்தக் கேள்விகள் கேட்கப்பட்டன என்பதை யோனா உணர்ந்தான். மனிதர் கையில் விழுகின்ற அபாயத்தைக் கண்டு கலங்கினான். ஐந்து கேள்விகளுக்கும் சரியான பதிலைச் சொன்னான். பரலோகம் அவன் உணர்வைக் கண்டது. அவன் விடுவிக்கப்பட்டான்.

இந்தியா எதிர் நோக்குகின்ற எழுப்புதல் ஒரு வித்தியாசமான எழுப்புதல். கிறிஸ்துவை அறியாத ருசிக்காத மக்கள் வாழுகின்ற நமது தேசத்தை தேவ கரம் அசைக்க வேண்டுமானால் கிறிஸ்தவர்கள் என்றபெயர் வைத்துக் கொண்டு முரட்டாட்டமாய் ஜீவிக்கின்றவர்கள் மத்தியில் ஒரு அசைவு வேண்டும். இரட்சிக்கப்பட்டோம் என்று கூறிவிட்டு உலக இச்சைகளில் அகப்பட்டு மடிந்து கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களுக்குள் எழுப்புதல் உண்டாக வேண்டும். பரிசுத்த ஆவி பெற்றுக் கொண்டோம் என்று மார்தட்டிக் கொண்டு பிரசங்க பீடத்தில் மேஜையைத் தட்டிக் கொண்டு ஆவியானவரின் கனியின்றி வாழுகின்றவர்களுக்குள் ஒரு அசைவு உருவாகுதல் வேண்டும்.

இயேசு பாவிகளின் மேல் மனதுருகிறார் என்பது உண்மைதான். ஆனால் சீயோனில் திகைக்கும் பாவிகளைக்

கண்டு தேவன் வேதனைப்படுகிறார். எரே 31:20 ஏசா 33:14. எனவே கிறிஸ்தவர்களுக்குள் எழுப்புதல் அக்கினி பற்றியெரியும் போது அது நமது தேசத்தின் அக்கிரமங்களை சுட்டெரிக்கும்.

சில மிஷனெரிகளுக்கு பணம் அனுப்புவதாலோ சில மிஷனெரிகளை வட இந்தியாவிற்கு அனுப்புவதாலோ எழுப்புதல் அடைந்து விட்டோம் என்று உன்னை நீயே ஏமாற்றிக் கொள்ளாதே நீ உடைய வேண்டும். நீ உடைக்கப் பட வேண்டும். உன் சபைக்குள் பரிசுத்த அக்கினி நதியாக ஓட வேண்டும். ஒரு மேன்மையான, வித்தியாசமான மனம் குமுறும் எழுப்புதல் நிச்சயம் உருவாக வேண்டும். அதற்கென உணர்வுள்ள ஒருவனை, உணர்வுக்காய் ஏங்கும் ஒருவனை தேவன் தேடுகின்றார். அந்த மனிதனாக யோனா உணர்வடைந்து எழும்பினார். நினிவே இரட்சிக்கப்பட்டது. இன்று நம் தேசத்திற்காக நீயும், நானும் உணர்வுடன் எழும்புவோமாக!

இலட்சத்து இருபதினாயிரம் பேர்களையும் மனந் திரும்பச் செய்து ஆடு மாடுகளையும், உயிரினங்களையும் உபவாசம் இருக்கும்படி பெரிய எழுப்புதலை நினிவேயில் உண்டாக்கினார் என்றால் இது போன்ற எழுப்புதல் இதுவரை சபை சரித்திரத்தில் இடம் பெறவே இல்லை. அந்த அளவுக்கு யோனா உடைக்கப் பட்டார். உணர்வடைந்தார். இவ்வித உணர்வை உண்டாக்கிய ஐந்து கேள்விகளையும் நாமும் தியானித்து உணர்வடைந்து எழுப்புதல் பெறுவோமாக!

## *1. யார் நிமித்தம் இந்த ஆபத்து வந்தது?*

நேரடியான இந்தக் கேள்விக்கு மறைமுகமாக யோனா பதில் அளிக்கவில்லை. "என்னிமித்தம் இந்த ஆபத்து உங்கள் மேல் வந்தது." என்று உணர்வுடன் கூறினான். அன்பான தேவபிள்ளையே! மனுசருக்கு பயப்படுகிற பயம் கண்ணியை வருவிக்கும். நீதி 29:25 என்பதனை அறிந்தும் கூட மனிதனுக்கு பயந்து தேவ காரியங்களையும், கட்டளைகளையும் நிறைவேற்ற மறுக்கும் உன்னை ஆண்டவர் தேடி வருகின்றார்.

சரீரத்தைச் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம். ஆத்துமாவையும், சரீரத்தையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள், மத் 10:28 தேவ பயம் யோனாவுக்குள் வந்தவுடனேயே சுயபரிசோதனை தொடர்ந்தது. தன்னால் இந்த ஆபத்து நேரிட்டதென்று தைரியமுடன் அறிக்கையிடுகிறான்.

நாம் இருக்கும் இடங்களில் சபைகளில் கொந்தளிப்புகள் பிரச்சனைகள் உருவாகவில்லையே? பெற்ற அழைப்பினை அல்லத் தட்டிய மனிதர்களால் மனுஷிகளால் எத்தனை குழப்பங்கள்., வேதனைகள், தேவையற்ற போராட்டங்கள் எழும்பியிருக்கிறது. தேவனுடைய பிள்ளையே! உனது வீட்டில் குழப்பமா? சபையில் போராட்டமா? உன்னுடைய ஊரில் கலகங்களா? உன் ஸ்தாபனத்தில் உன்னால் ஒருமனம் கெடுகின்றதா? இன்றே ஒருமுறை மனந்திரும்பு. நானே காரணம் என்று வெளிப்படையாக அறிக்கையிட்டு விட்டுவிடு.

யோனா வெளிப்படையாய் உணர்ந்தான். ஒத்துக் கொண்டான். பாதுகாக்கப்பட்டான். சிம்சோனோ ஆண்டவரின் வல்லமையை பலமுறை பெற்றாலும் உணர்வில்லாமல் தொடர்ந்து பாவத்தில் ஜீவித்தான். சத்துருக்களுடன் சேர்ந்து மடிந்தான். உனக்குத் தேவை எந்த அனுபவம். சிம்சோனின் அழிவா? யோனாவின் உணர்வா? உன்னை ஆண்டவர் தேடுகின்றார்.

## *2.உன் தொழிலென்ன?*

யோனா ஒரு தீர்க்கதரிசி என்பதை நாம் அறிவோம். அவனது தொழில் தீர்க்கதரிசனம் உரைத்தல் என்பதையும் நாமறிவோம். ஆனால் அவனிடம் கேட்கப்பட்ட இந்தக் கேள்விக்கு அவன் அளித்த பதில் நம்மை ஆச்சரியத்துக்குள் ஆழ்த்துகின்றது.

"பயபக்தியுள்ளவன்" (யோனா 1:9) என்ற ஆழமான அர்த்தமுள்ள தொழில்தான் யோனாவின் தொழிலாய் இருந்தது. தேவனிடத்தில் பயபக்தியாய் வாழ்வதே நம் தலையாய கடமை அல்லது தொழிலாய் இருத்தல் அவசியம் தான் ஒரு தீர்க்கதரிசி என்பதை வெளிக் காட்டிக் கொள்ள யோனா விரும்பவில்லை.

தன்னுடைய ஊழியமும், தீர்க்கதரிசன வரமும், தேவனுடைய கிருபையினால் உண்டானது என்பதை அவன் தெளிவாக அறிந்தான். எனது தொழிலா? அது பயபக்தியாகும். என்பதை உணரவேண்டும்.

வானத்தின் ஜோதியே மகிமையையெல்லாம் விட்டு பூவுலகில் வந்து கந்தைத் துணியணிந்து ஏழைக் கோலத்தைப் பூண்ட ஆண்டவரைப் பின்பற்றுவோமானால் பயபக்திதான் நமது தொழிலாய் இருக்க வேண்டும். நமது ஊழியம் ஆண்டவருக்கு வேண்டும். அதைவிட நாமே ஆண்டவருக்கு வேண்டும். எனவே பயபக்தியே நமது தொழிலாகட்டும். ஆண்டவர் எதிர் நோக்கும் அருமைக்குணம் அதுவே ஆண்டவர் உன்னை பயன்படுத்த விரும்புகிறார். அவர் உன்னிடம் எதிர்பார்க்கும் தகுதி பயபக்தியாகும்.

சமுதாயத்தில், சபையில் நமக்கு இருக்கின்ற மேன்மைகளை தியாகம் செய்ய நம்மை என்றைக்கு ஒப்புக் கொடுக்கின்றோமோ அன்றைக்கு மட்டுமே தேவன் நம்மை உபயோகிப்பார். அந்த யோனாவாக நாம் இன்று எழும்புவோமா?

## *3. நீ எங்கே இருந்து வருகிறாய்?*

தேவ சமூகத்தில் அமர்ந்து ஆண்டவருடைய குரலைக் கேட்கும் அருங்குணம் யோனாவுக்கு உண்டு என்பதை அவனுடைய வார்த்தை வெளிப்படுத்துகின்றன. எங்கேயிருந்து வருகிறாய்? என்ற கேள்விக்கு "நான் தேவ சமூகத்தை விட்டு ஓடிப் போகிறவன்" என்று பதில் சொல்கிறதை நாம் காண்கிறோம். அதிலிருந்து அவன் தேவ சமூகத்தில் இருந்ததை நாம் அறிகிறோம். யோனா கீழ்ப்படியாதது உண்மை. அவன் தவறு செய்தது உண்மை. ஆனால் அதுவரை அவன் இருந்த இடம் பாவிகளுடைய வழியோ, பரியாசக்காரர் உட்காரும் இடமோ? அல்ல. (சங் 1:1) தேவ சமூகத்தில் இருந்தவன் (யோனா 1:10)

தேவன் தேடுகின்ற மனிதன் தேவ சமூகத்தை வாஞ்சிக்கும்

மனிதனாக இருப்பது அவசியம். தனது வார்த்தைக்கு கீழ்படியாமல் உலகைக் கண்டு பயந்து ஓடிப்போகும் யோனாவைத் தேடி வந்து அவனது பாதையை தடுத்து நிறுத்தி தனது மகா பெரிய ஊழியத்தை அவனிடம் கொடுத்ததற்கு மிகமுக்கிய காரணம் தேவனுடைய சமூகத்தில் அவனோடு அவருக்கு இருந்த தொடர்புதான். தேவ சமூகத்தில் அமர்ந்திருக்க உனக்கு நேரமுண்டா? அவரோடு பேசுகின்ற பழக்கமுண்டா? தேவன் உன்னோடு பேசுவதைக் கேட்டதுண்டா? அவர் சமூகத்தில் பரிபூரண ஆனந்தமும், அவர் வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டல்லவா? சங் 16:11

தேவ சமூகம் என்பது மறக்க முடியாத ஸ்தலம். மறுக்க முடியாத உண்மை, அனுபவம். போராட்டங்கள் மத்தியில், அவமானங்கள் மத்தியில் நம்மைத் தேற்றுகின்ற ஓர் இன்ப ஸ்தலம், மகிமையின் ஸ்தலம், கிருபையின் ஸ்தலம், தேவ சமூகமே.

தேவ சமூத்தில் இருந்து பழகினவருக்கு ஒரு போதும் சோர்வு வருவதில்லை. ஒரு வேளை அவன் சோர்வடைந்தாலும் ஆண்டவர் அவனை விட்டு விலகுவதில்லை. அவனைத் திருப்பிக் கொண்டு வருமட்டும் இஸ்ரவேலைக் காக்கின்ற தேவன் உறங்குவதுமில்லை. தூங்குவதுமில்லை. (சங் 121:4).

அனுதினமும் நீ வேலைக்குப் போகும் போது எங்கேயிருந்து வருகிறாய்? உனது கல்லூரிக்குச் செல்லும்போது நீ எங்கிருந்து வருகிறாய்? ஊழியத்திற்கு புறப்படு முன் எங்கேயிருந்து வருகிறாய் தேவ சமூகத்திலிருந்தா? அல்லது உன் சுய இஷ்டமான இடத்திலிருந்தா? ஆண்டவர் ஒருவனைத் தேடுகின்றார். அவனே தேவ சமூகத்தை வாஞ்சிக்கும். அதனையே நித்தமும் தேடும் ஒருவன். நீயா அந்த மனிதன்?

## *4. உன் தேசம் எது?*

தொடந்து யோனா அளித்த பதில் மிகவும் ஆச்சரியமானது. யோனாவின் தகப்பனுடைய ஊர் காத்தேப்பேர் என்பதாகும்.

யோனா காத்தேப்பேர் ஊரானாகிய அமித்தாயின் குமாரன் என்பது மட்டுமே அவனைக் குறித்து கூறப்பட்டுள்ள பின்னணியாகும். ஆனால் யோனா தனது சொந்த தேசத்தைக் குறித்து மிகவும் ஆணித்தரமாகக் கூறுகின்றான்.

அவனது சொந்த தேசம் "பரலோகம்" என்பதனை வாசிக்கிறோம். (1:9) யோனாவுக்கு தன் ராஜ்யத்தின் மேல் இருந்த நம்பிக்கை "நமது குடியிருப்பு பரலோகத்திலிருக்கிறது". பிலி 3:20 என்ற அசையாத விசுவாசம் அவனது வாயின் அறிக்கையாக மாறியது. உலகம் எனக்குத் தஞ்சமல்ல. இது நாம் கடந்து போகின்ற வழி என்பதை உணருகிறவனே தேவன் தேடும் மனிதனாகும். நமது தேசம் பரலோகமா? அநித்தியமான இந்த உலகமா?

"பரலோகமே என் சொந்தமே?" என்று பாடிய பலரை "இந்தப் புவி எந்தன் சொந்தமல்ல" என்று கூவிய பலரை "பூலோகமே எனது மாட்சிமையின் தேசம்" என்று கூறி மகிமையை மாற்றி விட்ட அவலக்காட்சி எங்கும் காணுகின்ற மாயைக் காட்சி மாயை மாயை என்ற காலம் போய் விட்டது. "இன்பம் இன்பம்" என்ற வார்த்தையே ஜனங்களுக்கு பிடித்தமாயிருக்கிறது.

ஆதியில் கொண்ட அன்பில், வாஞ்சையில், விசுவாசத்தில், நம்பிக்கையில் சற்றேனும் மாறாத ஒருவனே கர்த்தருக்குப் பிரியமானவன். அவனுடைய தேசமே பரலோகம். அவனை மட்டுமே ஆண்டவர் தேடுகின்றார்.

சிலருடைய வாழ்வை கவனிக்கும் போது பரலோகத்தின் மேல் அவர்களுக்கு இருக்கும் அவநம்பிக்கையை தெளிவாக பார்க்க முடிகிறது. நமது வார்த்தைகளும், செய்கைகளும் பரலோகமாக இருக்கட்டும் இன்றைய தேவை பரலோகத்தைகயும் அங்கு இருக்கும் தேவனையும் நோக்கிக் கொண்டு வாழுகின்ற ஐக்கிய வாழ்வேயாகும். யோனாவோ தன் தேசம் பரலோகம் என்பதை தெளிவாக உணர்ந்தான்.

## *5. நீ என்ன ஜாதியான்?*

கப்பலில் இருந்தவர்கள் யோனாவிடம் கேட்ட இறுதிக் கேள்வி நம்மைச் சிந்திக்க வைக்கிறது. திகைக்க வைக்கிறது. அதிர்ச்சியடைய வைக்கிறது. இக்கேள்விக்கு யோனா அளித்த பதிலும் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. இந்தக் கேள்வி இன்று நம்மிடம் கேட்கப்பட்டால் நமது பதில் என்னாமாயிருக்கும். சற்று சிந்திப்போமாக!

இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்தில் ஒரு சிலர் ஜாதிப் பற்றினில் உறைந்து, அப்பெருமையில் அழிந்து அமிழ்ந்து கிடக்கின்றனர். ஜாதி என்ற ஒன்று இன்று அநேகமாக அனைவரையும் ஒரு வழியில் அல்லது இன்னொரு வழியில் ஆட்டிப் படைக்கின்றது.

தேவன் தாவரங்களைப் படைக்கும் போது ஜாதி ஜாதியாகப் படைத்தார். ஆதி 1:12. எனவே தான் மாமரத்தில் பல ஜாதிகள் உண்டு. ஆரஞ்சு, ஆப்பிள், முருங்கை, எல்லாத் தாவரங்களிலும் ஜாதி உண்டு.

தேவன் மிருகங்களைப் படைக்கும் போதும் (ஆதி 1:21) ஜாதி ஜாதியாகப் படைத்தார். எனவே தான் முயல்களில் பலவகை உண்டு. மான் பல வகை உண்டு. புலிகள் பலவிதம். யானைகளில் பலஜாதி உண்டு. நாய்களில் பலவிதம் உண்டு.

ஆனால் மனிதனைப் படைக்கும் போது மனிதனாக மட்டும் படைத்தார். ஒருவனைப் படைத்தார். அந்த ஒருவன் மூலம் இன்று உலகம் முழுவதும் ஜனத்திரள் பெருகியுள்ளது. எனவே வேதத்தின்படி

***1. பாவமுள்ள ஜாதி*** ஏசா 1:4

***2. பரிசுத்த ஜாதி*** 1 பேதுரு 2:9

என்ற இரண்டே ஜாதிகள் உண்டு. இவைகள் பிறப்பின்படி கணக்கிடப்படுவது கிடையாது. வாழ்க்கையின் ஜீவியப்படி தான் கணக்கிடப்படுகிறது.

நீங்கள் இரட்சிக்கப்படாமல் பாவததில் ஜீவித்தால் பாவமுள்ள ஜாதியாகும். இரட்சிக்கப்பட்டு பரிசுத்த ஜீவியம் செய்தால் பரிசுத்த ஜாதியாகும். பிறப்பின் மூலம் ஒருவரும் உயர்வதுமில்லை. தாழ்வதும் இல்லை. மறுபிறப்பின் மூலமே உயர்வு வருகிறது. பாவம் எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சிதான்.

யோனாவிடம் நீ என்ன ஜாதியான்? என்று கேட்டதற்கு தன்னை "எபிரேயன்" என்று கூறுகின்றார். இன்றைய ஜாதிப் பட்டியல்களைப் பார்க்கும் போது எபிரேயன் என்றவார்த்தை ஒரு ஜாதியைக் குறிப்பிடுவதில்லை. அது ஒரு தேச மக்களைக் குறிப்பிடும் வார்த்தையாகும்.

"இந்தியன்" என்று நம்மைக் கூறுவது போல் "எபிரேயன்" என்பதில் பல ஆழமான கருத்துக்கள் உள்ளன. எபிரேயன் என்றவுடன் ஆபிரகாமின் சந்ததி என்பதே நினைவுக்கு வருகிறது. இந்தியாவில் நாம் பிறந்திருக்கிறபடியால் ஜாதி என்னும் பெயரும் நம்மோடு ஒட்டி விட்டது உண்மை தான். ஆனால் நாம் ஜாதியை மறந்து விடுதல் அவசியம். பரலோகம் எந்த ஜாதியாருக்கும் உரியதல்ல.

ஜாதிப்பெருமையில் உழலுகின்ற ஒரு கிறிஸ்தவனோ, கிறிஸ்தவ ஊழியனோ ஒருக்காலும் ஜனத்தை கிறிஸ்துவண்டை வழி நடத்த முடியாது. ஜாதியின் மேல் பசிதாகம் உள்ளவன் பாக்கியவான் என்று சொல்லப்படவில்லை. நீதியின் மேல் பசிதாகம் உள்ளவனே கர்த்தருக்கு தேவை.

நீ என்ன ஜாதியான் என்றகேள்விக்கு சரியான பதில் கொடுக்கும் ஒருவனே எழுப்புதலைக் கொண்டுவர முடியும். ஆராதனைகள் முடிந்தவுடன் ஜாதிகளைச் சார்ந்தவர்களுடன் அன்பு பாராட்டிக் கொண்டு கலைந்து செல்லும் காட்சி இன்றைய சபைகளின் கண்கலங்கும் காட்சி. இக்காட்சி மாறுவது வரை இவர்களை ஆண்டவர் உபயோகிக்க முடியாது. நாம் ஆவிக்குரிய எபிரேயன். அக்கரைக்கு அழைக்கப்பட்டவன். எபிரேயன் எகிப்தியருக்கு அருவருப்பானவர்கள். தான் கிறிஸ்தவன் என்று அறிக்கையிட்டால் தன்னை சூழ உள்ளவர்கள் அருவருத்தாலும்

பரவாயில்லை என்ற தைரியமுள்ளவனே உண்மையான எபிரேயன். தேவபிள்ளையே நீ என்னஜாதி ? உன் பதில் என்ன?

இந்த விசயத்தில் ஊழியர்கள் மட்டத்தில் ஒரு தெளிவு பிறக்குமானால் விசுவாசிகள் மத்தியில் தெளிவு பிறந்துவிடும். அநேகர் சொல்வதெல்லாம் நாம் உலகத்தில் தானே பிரதர் வாழ்கிறோம் என்பதாகும். ஆண்டவர் சொல்கிறார். "நீங்கள் உலகத்தார் அல்ல".

# 5. தீர்க்கதரிசிக்கு ஓர் தீர்க்கதரிசி

உணர்வடைந்த தீர்க்கதரிசிக்கு ஊழியம் செய்ய ஒரு மீனைக் கர்த்தர் அனுப்பினார். இரட்சிப்பை சுதந்தரிக்கப் போகிறவர்களுக்கு தேவதூதர்கள் பணிவிடை ஆவிகளாய் அனுப்பப்படுவது மட்டுமல்ல. (எபி.1:14) சில நேரங்களில் மிருகங்களையும், இயற்கைகளையும், நட்சத்திரங்களையும் ஊழியத்திற்கு உதவியாய் பயன்படுத்தியுள்ளார்.

★ பேசாத கழுதை, பேசி தீர்க்கதரிசியின் மதிகேட்டை தடுத்தது II பேதுரு 2:16

★ சேவல் கூவி அப்போஸ்தலனுக்கு அழுகையை உண்டாக்கியது லூக் 22:61.

★ நட்சத்திரங்கள் சிசெராவோடே யுத்தம் செய்து தெபோராளுக்கு வெற்றி தேடித் தந்தது. நியா. 5:20.

யோனா தீர்க்கதரிசியும் தேவ திட்டத்தில் ஊழியத்தை நிறைவேற்ற பெரிய மீன் உதவியாய் இருந்தது. இது ஐந்து விதத்தில் உதவியாய் இருந்தது, தீர்க்கதரிசிக்கு உதவி செய்யும் ஒரு தீர்க்கதரிசியாய் இருந்தது.

## *1. ஆயத்தப்படுத்தப்பட்ட மீன் :*

யோனா தீர்க்கதரிசன புஸ்தகத்தில் யோனாவுக்கு மூன்று அதிகாரங்களும மீனுக்கு ஒரு அதிகாரமும் தேவன் ஒதுக்கினார். யோனாவின் ஊழியத்துக்கு மிகவும் உதவியாய் இருந்தது இந்த மீன்தான். அதற்கு காரணம் இது ஆயத்தமாக்கப்பட்ட மீன் மத்தியதரைக்கடலில் பல இலட்சக்கணக்கான மீன்களும், மீன் வகைகளும் இருந்தாலும் தேவனால் பயன்படுத்தப்பட்டது. இந்த ஆயத்தமாக்கப்பட்ட மீன் தான். தேவ பிள்ளைகளே! தேவன் உங்களை ஆசீர்வதிக்க வேண்டுமானால் அதற்கு நீங்கள்

ஆயத்தப்பட வேண்டும். கர்த்தருடைய வருகைக்கு செல்லவும் நாம் ஆயத்தப்பட வேண்டும். ஜெபிப்பதற்கும் ஆயத்தம் தேவை சங் 5:3 மத் 25:10. பிரசங்கிப்பதற்கும், ஊழியம் செய்வதற்கும் போதிய ஆயத்தம் தேவை. ஆகையால் ஒருவன் இவைகளை விட்டு தன்னைச் சுத்திகரித்துக் கொண்டால் எஜமானுக்கு உபயோகமானதும் எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப் பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான். II தீமோ 2:21. ஆயுத்தமில்லாத ஊழியன் தன் ஊழியத்தில் வெட்கப்பட வேண்டியதாயிருக்கும். நினிவேயின் எழுப்புதலுக்கு தேவன் பயன்படுத்திய தீர்க்கதரிசிக்கு உதவி செய்யும் தீர்க்கதரிசி ஆயத்தமாக்கப்பட்ட மீன். தேவபிள்ளைகளே! நீங்களும் ஆயத்தப்படுங்கள். ஆயத்தப்படுத்துங்கள்.

## *2. தாமதியாத மீன் :*

யோனாவை விழுங்கிய மீனைக் குறித்து ***KEOTS*** என்றவார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இது தமிழில் பெரியமீன் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதற்கு மிகப் பெரிய கடல் ஜீவன் என்று அர்த்தம். மனிதர்களை அப்படியே விழுங்கக் கூடிய மீன்கள் இன்றும் கடலில் உள்ளன.

***RHINODON TYRICUS*** எனப்படும் சுறாமீன்கள் மனிதர்களை அப்படியே விழுங்கக்கூடியவை. மேலும் "ஸ்பெர்ம் திமிங்கலம்" ***(Sperm Whale)*** "வெள்ளை சுறா" ***(White shark)*** "திமிங்கலசுறா" ***(Whale shark)*** இவையாவும் மனிதரை அப்படியே விழுங்கக் கூடியவை.

இவ்வித மீன்கள் "திமிங்கல ஷார்க்" என்று அழைக்கப் படுகிறது. எழுபது அடி நீளம் வரையுள்ள இவ்வகை மீன்கள் மனிதனை முழுவதும் சேதமில்லாமல் விழுங்கக் கூடியவை.

இப்படிப்பட்ட மீன் ஒன்று ஒரு சமயம் இங்கிலாந்து வளைகுடாவில் கண்டுபிடிக்கப்பட்டு அதை பிடிக்கப் பிரயாசை எடுக்கும் போது ஒரு மீனவர் தவறி கடலுக்குள் விழுந்து விட்டார். உடனே அந்த மீன் அவனை விழுங்கி கடலுக்குள் மறைந்து

விட்டது. மற்றமீனவர்கள் அந்த மீனைத்தேடி 48 மணி நேரத்திற்குப் பின் வட கடலில் அதைக் கண்டுபிடித்து சுட்டு அம்மீனைக் கரைக்கு இழுத்து வந்து தங்கள் சிநேகிதனை கிறிஸ்தவ முறைப்படி அடக்கம் செய்ய எண்ணி அதன் வயிற்றைக் கிழித்துப் பார்த்த பொழுது அவனுடைய உடல் ஒரு சேதமுமில்லாமல் இருந்ததோடு அவனுக்குள் உயிரும் இருப்பது கண்டு ஆச்சரியப்பட்டனர்.

அவனை அவசர அவசரமாக மருத்துவமனைக்கு கொண்டு போன பொழுது அவன் அதிர்ச்சியில் தான் இருக்கிறான் என்று முதலுதவி சிகிச்சை கொடுத்து அனுப்பி விட்டார்கள். அவனை சில நாள் லண்டன் பொருள்காட்சியில் இருபதாம் நூற்றாண்டு யோனா என்று வர்ணித்து அவனைப் பார்ப்பதற்கு ஒரு ஷிலிங் கட்டணம் வசூலித்தார்களாம்.

“வேதத்துக்கும் விஞ்ஞானத்துக்கும் ஒற்றுமை” என்ற புத்தகத்தை எழுதிய ஹரி ரிம்மர் என்ற அமெரிக்க எழுத்தாளர் சில ஆண்டுகள் கழித்து அம்மனிதனை சந்தித்ததாகவும் அம்மனிதன் நல்ல சுகத்துடன் காணப்பட்டதாகவும் ஆனால் அவன் சரீரத்தில் முடியே இல்லாமல் போனது என்றும் அவன் நிறம் மஞ்சள் கலந்த பழுப்பு நிறமாக மாறியிருந்ததாகவும் தன் புத்தகத்தில் கூறியிருக்கிறார்.

சாதாரண விபத்தில் ஒரு மனிதன் ஒரு மீன் வயிற்றில் 2 நாள் உயிரோடு இருக்கக் கூடுமானால் கர்த்தர் ஆயத்தப்படுத்திய மீனின் வயிற்றில் யோனா மூன்று நாள் உயிரோடு இருப்பது கூடாத காரியமா? யோனாவுக்கு ஊழியம் செய்த மீன் ஆயத்த மாக்கப்பட்ட மீன் மட்டுமல்ல, அது தாமதியாத மீனும் கூட.

யோனாவைக் கப்பற்காரர் தூக்கி கடலில் எறிந்தவுடன் இந்த மீன் வேகமாய் நீந்தி வந்து யோனாவை விழுங்கியது. இந்த மீன் கர்த்தரின் கட்டளைக்கு கொஞ்சம் தாமதம் செய்திருந்தால் மற்றமீன் யோனாவை விழுங்கியிருக்கும். யோனாவின் சரித்திரமும், ஊழியமும் முடிந்திருக்கும். ஆகா! யோனாவை விழுங்கிய மீன் தாமதியாத மீன்.

இன்று ஆராதனைக்கு தாமதமாக வரும் விசுவாசிகள் உண்டு. விசுவாசிகள் தாமதமாக வருகிறார்கள் என்று ஆராதனையை தாமதமாகத் தொடங்கி தாமதமாக முடிக்கும் ஊழியர்களும் உண்டு.

“கால தாமதம் ஊழலை உருவாக்கும்” என்பது நம் நாட்டு அரசின் பொன் மொழியாகும். அன்பு நண்பர்களே! நம் ஆண்டவர் கால தாமதம் செய்கிறவர் அல்ல. பேதுரு கடலில் மூழ்கும் போது நம் ஆண்டவர் கொஞ்ச நேரம் தாமதம் செய்திருந்தால் பேதுருவின் சரித்திரம் முடிந்திருக்கும்.

★ **மனந்திரும்ப தாமதியாதே. (ஆதி 19:16)**

★ **ஞானஸ்நானம் எடுக்க தாமதியாதே (அப் 22:16)**

★ **நற்செய்தியைப் பிரசங்கிக்க தாமதியாதே (அப் 9:20)**

★ **காணிக்கை செலுத்த தாமதியாதே (யாத் 22:29)**

★ **அபிஷேகம் பெற்றுக்கொள்ள தாமதியாதே (*II* ராஜா 9:3)**

★ **பொருத்தனைகளை நிறைவேற்றத் தாமதியாதே (பிர 5:4)**

★ **கர்த்தருடைய வருகைக்கு தாமதியாதே (வெளி 22:22)**

தேவ பிள்ளைகளே! யோனாவின் ஊழியத்துக்கு உதவியாய் இருந்த மீன் தாமதமில்லாமல் கர்த்தரின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து விழுங்கியது. கர்த்தர் கட்டளையிட்டவுடன் தாமதியாமல் கக்கி விட்டது. நாமும் இன்று தேவனுடைய கட்டளைகளுக்கு தாமதியாமல் கீழ்படிவோமாக!

### *3. கீழ்படிதலுள்ள மீன் :*

மூன்று நாள் ஒரு மனிதன் மீனின் வயிற்றில் இருந்திருந்தால் கண்டிப்பாக ஆகாரத்தை ஜீரணிக்க செய்யும் இரைப்பை நீர் ***(Gastric Juice)*** சுரந்து மீனின் வயிறு அவனைச் கசக்கி சாகடித்திருக்குமே அல்லது மீன் அவனை விழுங்கும் போதே

தன் கூரிய பற்களால் கீறி நசுக்கிக் கொன்றிருக்குமே என்று எண்ணுவதுண்டு. ஆனால் இம்மீன் யோனாவுக்கு எந்த சேதமும் உண்டாக்கவில்லை. தேவ கட்டளைக்கு அப்படியே கீழ்ப்படிந்தது.

அன்பான உதவி ஊழியர்களே! உங்களுக்கு கீழ்படிதல் உண்டா. அருமையான விசுவாசிகளே! உங்களுக்கு கீழ்படிதல் உண்டா?

## 4. உபவாசமுள்ள மீன் :

யோனாவின் ஊழியத்திற்கு உதவி செய்த மீன் உபவாசம் இருக்கும் மீன். அந்த மீன் யோனாவை தன் வயிற்றில் ஏற்றுக் கொண்டது முதல் மூன்று நாள் கழித்து கக்கிவிடும் வரை அது வேறொரு ஆகாரமும் சாப்பிடவில்லை. சாப்பிட்டிருக்குமானால் மற்ற ஆகாரங்களோடு சேர்த்து யோனாவும் ஜீரணமாகியிருப்பார். இந்த மீன் மூன்று நாள் உபவாசம் எடுத்ததின் விளைவு நினிவேயின் மக்களும் உபவாசத்தோடு மனந்திரும்பினார்கள்.

இன்று உபவாசிக்கும் ஊழியர்களாலும், உபவாசிக்கும் சபையாராலும் தான் எழுப்புதல் வரப்போகிறது.

## 5. சுமந்து சென்றமீன் :

தேவன் ஆயத்தமாக்கப்பட்ட மீன் யோனாவை நினிவேயின் கரைவரைக்கும் சுமந்து சென்றது. இந்த மீன் நினிவே பட்டணத்திற்கு போவதற்கு (அக்காலத்தில் சூயஸ்கால்வாய் அமைக்கப்படாததால்) மத்திய தரைக்கடல் வழியாய் ஜிப்ரால்டர் ஜலசந்தி மூலம் அட்லாண்டிக் சமுத்திரத்தில் போய் ஆப்பிரிக்கக் கண்டத்தைச் சுற்றி வந்து பாரசீக வளைகுடாவைக் கடந்து, யூப்ரடிஸ், டைகிரிஸ் நதிகளில் மட்டும் குறைந்தது. 600 கிலோ மீட்டர்கள் அதாவது மொத்தத்தில் 25000 கிலோமீட்டர்கள் மூன்றேநாளில் நீந்தி யோனாவை சுமந்து சென்றிருக்கிறது என்று வேதப் பண்டிதர்கள் கணக்கிடுகிறார்கள்.

சர்வ வல்லமையுள்ள தேவன் அம்மீனை நினிவே

பட்டணத்துக்கு அருகிலுள்ள ஒரு சமுத்திரக் கரைக்கு நடத்தியிருக்கலாமே. யோப்பா பட்டணத்திலிருந்து 1600 கிலோமீட்டர் தூரம் வந்தால் நினிவே நகருக்கு அருகிலுள்ள கருங்கடலுள்ள ஓர் இடத்தைச் சேரலாம். அங்கிருந்து நினிவே 300 கிலோமீட்டர் அல்லது தோராயமாக 200 மைல்கள் இத்தூரத்தை பாடம் கற்பிக்கப்பட்டு மனந்திரும்பிய யோனா இலகுவில் நடந்து வந்திருக்கலாம்.

எப்படியும் யோனாவை மீன் சுமந்து சென்றது அற்புதச் செயல்தான். தீர்க்கதரிசிக்கு உதவியாய் இருந்த மீன் யோனாவை சுமந்து சென்றது. பல மைல்கள் தூரம் வேகமாய் நீந்திச் சென்றது.

அன்பானவர்களே! நமக்கும் நம் ஆண்டவர் மீது பாசமும், நேசமும் இருக்குமானால் அவர் கற்பனைகள் பாரமாகத் தோன்றாது. மீன் நமக்கு ஒரு பாடம் புகட்டுகிறது. முன் மாதிரி காட்டுகிறது.

# 6. திரும்பும் தீர்க்கதரிசி

உலக எழுப்புதல் சரித்திரத்தைக் கண்ணோக்கினால் ஒரு உண்மையைக் கண்டு கொள்ள முடியும். அது என்னவென்றால் எழுப்புதல் தொடங்குவதற்கு முன்பு சில நாட்களாக, சில வருடங்களாக சிலரோ அல்லது பலரோ ஜெபத்தில் நேரம் செலவிட்டிருப்பார்கள். ஜெபிக்கிற இடத்தில் தான் எழுப்புதல் உண்டாகும்.

அப்போஸ்தலர் கால எழுப்புதலுக்கு எருசலேமில் மேல் வீட்டறையில் 10 நாட்கள் தொடர் ஜெபத்தில் தான் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டார். எழுப்புதல் உண்டானது எருசலேமில் மாத்திரம் 2 லட்சம் விசுவாசிகள் கூடி ஆராதித்தார்கள் என்பது வேத பண்டிதர்களின் கணக்காகும்.

அந்தியோகியா பட்டணத்தில் புறஜாதியார் மத்தியில் எழுப்புதல் உண்டாகக் காரணம் அங்கு கொர்நேலியு, என்ற மனுஷன் சில காலமாக தொடர்ந்து ஜெபித்துக் கொண்டே யிருந்தான். தேவதூதன் இறங்கி வந்தான். பேதுரு அனுப்பப் பட்டார். பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டார். அந்தியோகியாவில் பெரிய எழுப்புதல் சபை எழும்பிற்று. அவர்கள் மூலம் முழு உலகத்திற்கும மிஷனரிகள் புறப்பட்டுப் போய் உலகத்தை கலக்கினார்கள். உலகத்தை தலைகீழாய் மாற்றினார்கள். (அப் 13:1,2) (அப் 17:6)

பிலிப்பு பட்டணத்தின் எழுப்புதலுக்கு காரணம் அங்கு ஆற்றினருகே சில ஸ்திரீகள் வழக்கமாக கூடி ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். ஜெபிக்கிறவர்கள் மத்தியில் தான் தேவ வரம் பெற்ற தீர்க்கதரிசிகளும், அப்போஸ்தலர்களும் அனுப்பப் படுவார்கள். பவுல் அங்கே வந்தார். பரிசுத்த ஆவியானவர் பலமாய் ஊற்றப்பட்டார். நட்சத்திரங்களைப் போல பிரகாசிக்கிற சபை எழும்பிற்று. பவுல் இந்த பிலிப்பியர் சபைக்காக தன்னைப்

பானபலியாய் வார்க்கிறேன் என்று சொன்னார். அவ்வளவு பெரிய எழுப்புதல் உண்டாகக் காரணம் அங்கு ஜெபித்த சில ஸ்திரீகள் மூலம்தான். (அப் 16:13)

யோனா தீர்க்கதரிசியும் நினிவேயின் எழுப்புதலுக்கு முகாந்திரமாக பயன்படுத்தப்படுவதற்கு முன்பு ஜெபிக்கிறவராய் காணப்பட்டார். ஜெபத்தின் மூலமே இத்தீர்க்கதரிசி தேவனிடம் திரும்பினார். திரும்பும் தீர்க்கதரிசி 7 விதமான ஜெபங்களை ஏறெடுத்தார். அதை கருத்தாய் தியானிப்போமாக.

## *1. எந்நிலையிலும் ஜெபம்*

யோனா தீர்க்கதரிசி தேவன் பக்கமாய் திரும்பிய முதல்படி எந்நிலையிலும் ஜெபித்ததாகும். அந்த மீனின் வயிற்றிலிருந்து யோனா தன் தேவனாகிய கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான். (யோனா 3:1) ஜெபக் கூட்டங்களுக்கு ஏன் வரவில்லை பிரதர்? என்று கேட்டால் நமது விசுவாசிகள் சொல்லும் நொண்டிச்சாக்குகள் வேதனையாய் இருக்கிறது.

முழு இரவு ஜெபங்களுக்கு ஏன் வரவில்லை என்று உடன் ஊழியர்களிடத்தில் கேட்கும் போது அவர்கள் சொல்லும் பதில் நியாயம் போல் தென்பட்டாலும் உள்ளத்தை ஆராய்ந்து பார்க்கிற கர்த்தர் சொல்லுவார் அவர்களுக்கு ஜெபத்தில் வாஞ்சையில்லை என்பார்.

நண்பர்களே! மழை பெய்தாலும் சினிமா தியேட்டர்களில் கூட்டம் குறைவதில்லை. மின்சாரம் தடைபட்டாலும் சினிமா தடைபடுவதில்லை. இரவுக் காட்சிகளிலும், சினிமா அரங்குகளில் பெண்கள் கூட்டம் குறையவில்லை. ஆனால் சபைகளில் நடக்கும் பகல் ஜெபங்களுக்கு விடுமுறை கிடைக்கவில்லை என்கின்றனர். இரவு ஜெபங்களுக்கு வர சரீரம் களைப்பாயிருக்கிறது என்கின்றனர்.

என்றாலும் ஜெப வாஞ்சையை அறிந்த கொஞ்சம் பேர் உண்டு. இவர்கள் யோனாவைப் போல் எந்நிலையிலும் ஜெபிக்கிறவர்கள். இப்படிப்பட்டவர்கள் சபையில் இருப்பதினால்

தான் ஊழியங்கள் ஜெயமாய் நடக்கின்றது. முழங்கால் வீரர்கள், வீராங்கனைகள் சபையில் இருப்பதால் தான் முன்னேற்றமாய் தேவனுடைய வேலை நடக்கின்றது. சபையின் சக்கரத்தை சுழல வைக்கும் உள் சக்கரம் ***(INNER WHEEL)*** இவர்கள் தான். சக்கரங்களின் அச்சாணி இவர்கள் தான். ஜெபிக்கிறவர்களே! எந்நிலையிலும் யோனாவைப் போல் ஜெபியுங்கள். உங்கள் ஜெபத்திற்கு பதில் உண்டு. பலன் உண்டு.

மீனின் வயிற்றிலிருந்து யோனா ஜெபிப்பது கடினமான காரியம் தான். இன்றோ நமக்கு சுதந்திர தேசம். நல்ல ஜெபவீடுகள். உற்சாகப்படுத்த தந்தை பெர்க்மான்ஸ் அவர்களின் பாடல்கள். எவ்வளவு அனுகூலமான சூழ்நிலை நமக்கு இருக்கின்றது. எந்நிலையிலும் ஜெபிப்போம். எழுப்புதலுக்கு திரும்புவோம்.

## *2. நெருக்கத்திலும் ஜெபம் :*

யோனாவின் ஜெபவாழ்வு அதிசயமானது. என் நெருக்கத்திலே நான் கர்த்தரை நோக்கி கூப்பிட்டேன். அவர் எனக்கு உத்தரவு அருளினார். நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூப்பிட்டேன். நீர் என் சத்தத்தை கேட்டீர். (யோனா 2;2) என்று யோனா தன் ஜெப வாழ்க்கையை நமக்கு முன்மாதிரியாக்கி இருக்கிறார்.

ஒருவன் துன்பப்பட்டால் அவன் ஜெபம் பண்ணக் கடவன் என்பது தான் தேவனின் அறைக்கூவல். யாக் 5:17. எனவே நெருக்கத்தில் தான் அதிகமாக ஜெபிக்க வேண்டும். நெருக்கம் வரும் போது நமது இதயம் உடையும். நொறுங்கும். அப்பொழுது ஜெப ஆவி எளிதில் நமக்குள் ஊற்றப்படும்.

நெருக்கங்கள் வரும்போது மற்ற ஆத்துமாக்கள் பேரில் மனதுருக்கம் உண்டாகும். மனதுருகி ஜெபித்தால் அற்புதங்கள் நடக்கும். யோனாவுக்கு வந்த நெருக்கம் ஜீவ, மரணப்போராட்டம். இந்நிலையில் கூட உயிர்பிழைக்க சரீர முயற்சி எடுப்பதை நிறுத்திவிட்டு தன்னைக்குறித்த தெய்வீக திட்டம் நிறைவேற ஜெபிக்கிறார்.

இன்று விசுவாசிகளின் நெருக்கங்களை விசாரித்துப் பார்த்தால் சிரிப்புதான் வருகிறது. டவுண் பஸ்ஸில் ஜன நெருக்கத்தின் மத்தியில் பிரயாணம் செய்து சபை ஆராதனைக்கு வருவது தான் அவர்களுடைய நெருக்கம். அப்போஸ்தலர் நாட்களைப் போலவோ, அல்லது ஆரம்ப நாட்களைப் போலவோ நெருக்கங்கள் பலருக்கு கிடையாது.

தேவனுடைய பிள்ளையே நெருக்கங்கள் மத்தியில் ஜெபியுங்கள். இரட்சகர்களை தேவன் எழுப்பி நெருக்கத்தில் உள்ள உங்களை விடுவிப்பார். விசாலத்தை தேவன் உண்டாக்குவார்.

## *3. விசுவாசமுள்ள ஜெபம்*

ஜெபத்திற்கு பதில் கிடைக்க விசுவாசமே முக்கியம். விசுவாசமுள்ள ஜெபமே பிணியாளியை இரட்சிக்கும் (யாக் 5: 18) விசுவாசமுள்ள ஜெபமே மலைகளைப் பெயர்க்கும். விசுவாசமுள்ள ஜெபமே மழையைக் கொண்டு வரும். விசுவாசமுள்ள ஜெபமே மலடியைச் சந்தோசமான பிள்ளைத் தாய்ச்சியாக்கும்.

யோனாவின் ஜெபம் விசுவாசமுள்ள ஜெபம். நான் உமது கண்களுக்கு எதிரே இராதபடிக்கு தள்ளப்பட்டேன். ஆகிலும் இன்னமும் உம்முடைய பரிசுத்த ஆலயத்தை நோக்குவேன் என்றேன் (யோனா 2:4) முடியும் என்கிற காரியத்திற்கு விசுவாசம் தேவையில்லை. முடியாத காரியத்தை முடித்து வைப்பதற்குத் தான் விசுவாசம் தேவை. யோனாவின் வாழ்வும், ஊழியமும் முடிந்து போன நிலை. பிழைப்போம் என்னும் நம்பிக்கை அற்றுப் போயிற்று. ஆயினும் விசுவாசத்தோடு தேவாலயத்தை கண்ணோக்கினார். ஜெபித்தார். பதில் கிடைத்தது. என் தேவனாகிய கர்த்தாவே நீர் என் பிராணனை அழிவுக்கு தப்புவித்தீர் (யோனா 2:6) என்றார். விசுவாசமுள்ள ஜெபத்திற்கு உடனே பதில் வரும்.

**"ஜெபம் பரலோகத்திற்கு நம்மைக் கொண்டு செல்லும்."**

***"விசுவாசம் பரலோகத்தை நம்மிடம் கொண்டு வரும்"*** என்று ஸ்பர்ஜன் கூறியுள்ளார். எனவே விசுவாசத்தோடு ஜெபிக்கும் யோனா தேவனிடம் திரும்பி வந்தார். நினிவே தேசத்தையே தேவனிடம் திருப்பிவிட்டார்.

பயம், கவலை, அவிசுவாசம், அவநம்பிக்கை, ஆகியவை விசுவாசத்தின் எதிரிகளாகும். "புலியினால் செத்தவர்களை விட கிலியினால் செத்தவர்களே அதிகம்." விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும். யோனாவின் விசுவாச ஜெபம் அவரை தேவனிடத்திற்கு திருப்பிக் கொண்டு வந்தது. தேவ ஜனமே! உங்கள் ஜெபத்தில் விசுவாசத்துடன் ஜெபியுங்கள். ஜெயம் பெறுங்கள்.

## ***4. சோர்விலும் ஜெபம் :***

ஜெபிக்கிறவர்களுக்கு பதில் வரத் தாமதமாகும் போது சோர்வு வருவது இயற்கைதான். என் ஆத்துமா என்னில் தொய்ந்து போகையில் கர்த்தரை நினைத்தேன் என்கிற யோனா சோர்விலும் ஜெபித்தார் என்று அறிய முடிகிறது.

ஜெபிக்கிறவர்களுக்கு சோர்வு வரும் போது உற்சாக மடைவதற்காகவே தான் லூக் 18:1-8 வசனங்களை நம் ஆண்டவர் சொல்லியுள்ளார். சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும் என்பதைக் குறித்து இயேசு உவமை சொன்னார்.

ஜெபத்தில் ஏன் சோர்வு வருகிறது? நம்முடைய எதிராளியை நாம் மறந்து போவதால் தான். நமக்கு ஒரு எதிராளி உண்டு. அவன் நமக்கு அநியாயம் செய்து கொண்டேயிருப்பான். நீதி கிடைக்க வேண்டுமானால் சோர்ந்து போகாமல் ஜெபிக்க வேண்டும்.

ஜெபித்து ஜெபித்து சோர்ந்து போய் விட்டாயோ? சகோதரனே, சகோதரியே, தேவன் தம்மை நோக்கி இரவும், பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்

பட்டவர்களின் விசயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயம் செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்தில் அவர்களுக்கு நியாயம் செய்வார்.

கிதியோன் விடாய்த்திருந்தும் சத்துருவை பின் தொடர்ந்தான். சத்துருவின் மேல் பூரண ஜெயம் எடுத்தான். நீங்களும் ஆவியிலோ ஆத்துமாவிலோ, சரீரத்திலோ சோர்ந்திருந்தாலும் தொடர்ந்து ஜெபியுங்கள். உங்கள் ஜெபத்திற்கு பதில் உண்டு.

சோர்வில் தொடர்ந்து ஜெபித்த யோனாவுக்கு பதில் கிடைத்ததா? அப்பொழுது என் விண்ணப்பம் உமது பரிசுத்த ஆலயத்தில் உம்மிடத்தில் வந்து சேர்ந்தது என்கிறார். சோர்விலும ஜெபித்த யோனா தேவனிடம் திரும்பிய தீர்க்கதரிசியானார்.

## *5. துதியோடு ஜெபம் :*

ஜெபத்தின் மகுடம் துதியோடு ஜெபித்தலாகும். யோனா தீர்க்கதரிசி தெளிவாகவே துதியின் இரகசியத்தை அறிந்து வைத்திருந்தார். நானொவெனில் துதியின் சத்தத்தோடே பலியிடுவேன் (யோனா 2:9) என்று ஜெபித்தார். ***(With the voice of thanks giving)*** ஜெபத்திற்கும், விண்ணப்பத்திற்கும் பதில் கிடைத்த பின்பு தேவனுக்கு நன்றி சொல்வதை விட ஜெபித்துக் கொண்டிருக்கும் போதே பதில் கிடைத்து விட்டதாக நினைத்து தேவனுக்கு நன்றி சொல்வது பூரண விசுவாசத்தையும், ஆவிக்குரிய முதிர்ச்சியையும் காட்டுகிறது.

யோனா மீனின் வயிற்றைவிட்டு வெளியே வருமுன்பே தேவனுக்கு நன்றி சொன்னார். தேவன் விடுவிக்க வல்லவர். மீட்க வல்லவர். புது வாழ்வு தர வல்லவர் என்று யோனா துதித்தார்.

ஆபிரகாமின் வாழ்க்கையிலும ஈசாக்கைப் பெறுவதற்கு முன்பே ஈசாக்குக்காக தேவனுக்கு நன்றியையும் ஸ்தோத்திரத்தையும் ஆபிரகாம் செலுத்தினார் (ரோமா 4:21) இதுவே வல்லமையான விசுவாசம்.

ஜெபித்து கொண்டேயிருப்பது பெலவீனமான

விசுவாசமாகும். ஜெபத்திற்குப் பின்பு துதிப்பது பலமுள்ள விசுவாசமாகும். தேவ பிள்ளைகளே, யோனாவை தேவன் நன்றாக பயிற்சி கொடுத்திருந்தார். எப்படி ஜெபிக்க வேண்டும் என்று வெளிப்படுத்தியிருந்தார்.

உங்களுடைய நிறைவேறாத காரியங்களுக்காய் தொடர்ந்து ஜெபிப்பதை நிறுத்திவிட்டு துதிப்போமாக! யோனா துதித்தார். மீனின் வேகம் அதிகரித்தது. வேகமாய் சென்று நினிவேயின் கரையில் கக்கிவிட்டது.

தேவனுடைய ஜனமே! உன் சிறையிருப்பு என்ன? நீ எழும்பி பிரகாசிக்க முடியாதபடிக்கு உன்னை மறைத்து வைக்கும் போராட்டம் என்ன? கைதட்டி பாடமுடியாத படிக்கு உன்னை அடக்கி வைத்திருக்கும் சிறைச்சாலை எது? துதி! விடுதலை பெறுவாய்.

துதிப்பதற்கு முன்பு தேவனுடைய நாமங்களையும் தேவனுடைய மாட்சிமை பொருந்திய செயல்களையும் தியானித்து, உச்சரித்து துதியுங்கள். எரிகோ விழும். வாக்குத் தத்த பியூலா தேசத்திற்கு வழி உண்டாகும். திரும்பும் தீர்க்கதரிசி துதியோடு ஜெபித்தார்.

## *6. பொருத்தனையோடு ஜெபம் :*

வாழ்ந்தால் இயேசுவுக்கே! பிழைத்தால் இயேசுவுக்கே!! மரித்தால் இயேசுவுக்கே! எஞ்சிய வாழ்க்கை இயேசுவுக்கே!! யோனா தீர்க்கதரிசி மீனின் வயிற்றுக்குள் இருந்து ஜெபிக்கும் போது பொருத்தனையோடு ஜெபித்தார்.

நீ தேவனுக்கு ஸ்தோத்திர பலியிட்டு உன்னதமானவருக்கு உன் பொருத்தனையை செலுத்தி ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கி கூப்பிடு. நான் உன்னை விடுவிப்பேன். நீ என்னை மகிமைப்படுத்துவாய். (சங் 50:14,15) என்பதே தேவனுடைய வாக்குத் தத்தம். இதன்படி தான் யோனா பொருத்தனை செய்து ஜெபித்தார்.

ஆண்டவரே ஜீவனைக்கூட்டிக்கொடும். நான் நினிவேக்குச் சென்று உம்முடைய ஊழியத்தை நிறைவேற்றுவேன் என்று பொருத்தனையோடு ஜெபித்த யோனாவுக்கு பதில் கிடைத்தது. ஜீவன் பிழைத்தது. மீன் யோனாவை கரையில் கொண்டு வந்து கக்கிவிட்டது.

ஜெபத்தில் பொருத்தனை செய்வது நல்லது. ஆனால் கட்டாயம் அதை நிறைவேற்றவேண்டும். அன்னாள் பொருத்தனை செய்தாள். நிறைவேற்றினாள். நீங்களும் பொருத்தனைகளை நிறைவேற்றுங்கள். காரியம் கைகூடி வந்த பின்பு பார்வோனின் இருதயம் மாறுபடுவதைப் போல் ஜெபத்திற்கு பதில் கிடைத்த பின்பு பொருத்தனையை வாபஸ் பெறாதிருங்கள். அது கண்ணியாக முடியும். திரும்பும் தீர்க்கதரிசியான யோனா பொருத்தனையோடு திரும்பி வந்தார். தேவன் ஏற்றுக் கொண்டார். பயன்படுத்தினார்.

## *7. இரட்சிப்புக்காக ஜெபம் :*

யோனாவின் சரீரம் மீனின் வயிற்றுக்குள் இருந்தது. யோனாவின் ஆத்துமாவோ பாதாளத்தின் வயிற்றுக்குள் போய் விட்டது. பாதாளம் என்ற வார்த்தைக்கு எபிரேய மொழியில் SHEOL - The unseen world - காணப்படாத உலகம்.

The Place of departed soul சரீரத்தை விட்டுப் பிரிந்த பாவிகளின் ஆத்துமா செல்லும் இடம்.

ஆங்கிலத்தில் *HELL* என்றும் நரகம் அல்லது பாதாளம் என்றும் சொல்லப்பட்டுள்ளது. எனவே யோனாவுக்கு இரண்டு வித இரட்சிப்பு தேவைப்படுகிறது.

1. சரீரம் மீனின் வயிற்றிலிருந்து வெளியே வர வேண்டும்.

2. ஆத்துமா பாதாளத்தின் வயிற்றிலிருந்து வெளியே வர வேண்டும்.

எனவே இரட்சிப்பு என்பது நமது ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதுக்கும் கிடைக்கும் விடுதலையாகும். இந்த இரட்சிப்பை

கர்த்தர் ஒருவரே தர முடியும். எனவே தான் இரட்சிப்பு கர்த்தருடையது என்று ஜெபித்தார்.

யோனா புத்தகத்தின் திறவு கோல் வார்த்தை இரட்சிப்பு என்பது தான். யோனாவுக்கு பூரண இரட்சிப்பு கிடைத்தபடியால் 1,20,000 நினிவே மக்கள் இரட்சிக்கப்பட்டார்கள். அருமையான தேவ ஊழியரே, விசுவாசிகளே! நமது இரட்சிப்பை நாம் எப்படி புரிந்து கொண்டுள்ளோம். ஆத்துமாவிலும் சரீரத்திலும் விடுதலை பெறுவது தான் இரட்சிப்பு.

* **இயேசுவின் நாமம் இரட்சிக்கும் நாமம்.** மத் 1:21
* **இயேசுவின் இரத்தம் இரட்சிக்கும் தைலம்.** எரே 4:16 I யோவான் 1:7
* **இயேசுவாலன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை.** அப் 4:12
* **இயேசுவே முற்றும் முடிய இரட்சிக்கிறவர்.** பிலி 1:5
* **இயேசுவே பூரண இரட்சிப்பை அருளுபவர்.** ஏசா 33:6

இப்படிப்பட்ட இரட்சிப்புக்காய் யோனா ஜெபித்தார். கர்த்தர் தமது மகிமையை வெளிப்படுத்தினார். யோனாவின் ஆத்துமா பாதாளத்திலிருந்தும், சரீரம் மீனின் வயிற்றிலிருந்தும் இரட்சிக்கப்பட்டது. அல்லேலூயா!

இயேசு கிறிஸ்துவால் இரட்சிக்க முடியாத பாவி ஒருவரும் இல்லை. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவ முடியாத பாவமும் எதுவுமில்லை. தேவனால் எல்லாம் கூடும்.

# 7. தீரமுள்ள தீர்க்கதரிசி

அறிவிக்கப்படாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? கேள்விப்படாவிட்டால் எப்படி விசுவாசிப்பார்கள்? விசுவாசிக்கா விட்டால் எப்படி தொழுது கொள்வார்கள்? ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும். கேள்வி தேவனுடைய வசனத்தினால் வரும். (ரோமர் 10:16, 17) என்ற தேவனின் திருவுளச் சித்தப்படி நினிவே மக்கள் தேவனை விசுவாசிப்பதற்காக அறிவிக்கிறவன் அனுப்பப்பட்டான். அனுப்பப்பட்டவன் பல அனுபவங்களால் உடைக்கப்பட்டான். பின்பு உருவாக்கப்பட்டான். நினிவேக்கு அனுப்பப்பட்டான். யோனா எழுந்து ஒரு நாள் பிரயாணம் பண்ணி தெருப்பிரசங்கம் செய்தான். எழுப்புதல் உண்டாயிற்று. தேசம் முழுவதும் இரட்சிக்கப்பட்டது. ஒரே பிரசங்கம் தான் ஊர் முழுவதும் மனந்திரும்பியது.

**"யோனா ஜெபத்தில் வீரன்"**

**"யோனா பிரசங்கத்தில் தீரன்"**

ஜெபத்தில் வீரராய் இருப்பவர்களே பிரசங்கத்தில் தீரராய் இருக்க முடியும்.

Heart broken Prophect brings

Heart breaking message என்று யோனாவைக் குறித்துச் சொல்லலாம்.

**"இதயம் நொறுங்கிய தீர்க்கதரிசி"**

**"இதயம் உடைக்கும் செய்தியோடு"**

நினிவேக்குப் போனார். நினிவே முழுவதும் மனந்திரும்பியது. யோனா 3ஆம் அதிகாரத்தில் யோனாவின் பிரசங்கம் 7 விதமான செய்தியாக இருப்பதைக் காணமுடியும்.

## 1. நியாயத்தீர்ப்பின் செய்தி :

இரண்டாந்தரம் கர்த்தருடைய வார்த்தையுண்டானது. யோனா அந்த வார்த்தையை செய்தியாக எடுத்துக் கொண்டு போனார். அந்த செய்தி நியாயத் தீர்ப்பின் செய்தியாய் இருந்தது. "இன்னும் நாற்பது நாள் உண்டு நினிவே கவிழ்க்கப்படும்". என்பதே யோனாவின் செய்தி.

கர்த்தர் கொடுப்பது மனதுருக்கத்தின் செய்தியாகவும் இருக்கலாம். அல்லது கண்டித்து உணர்த்தும் செய்தியாகவும் இருக்கலாம். அல்லது நியாயத்தீர்ப்பின் செய்தியாகவும் இருக்கலாம். எந்த செய்தியானாலும் அது கர்த்தரின் செய்தியாக இருக்க வேண்டும்.

நியாயத் தீர்ப்பு என்பது சிலருக்கு மரணத்திற்கு பின்பு தேவனுடைய நியாயத்தீர்ப்பாக இருக்கும். ஆனால் சிலர் மரணத்திற்கு முன்பே, இவ்வுலகில் இருக்கும் போதே தேவனால் நியாயந்தீர்க்கப்படுகிறார்கள். சிலருடைய பாவங்கள் அவர்களைப் பின் தொடரும். சிலருடைய பாவம் நியாயத்தீர்ப்புக்கு முந்திக் கொள்ளும். I தீமோ 5:24 நினிவேயின் பாவங்களுக்கு தேவதண்டனை, நியாயத் தீர்ப்புக்கு முந்திக் கொண்டது. இன்னும் நாற்பது நாளில் நினிவே கவிழ்க்கப்படும்.

நம் இந்திய தேசத்தின் சம்பவங்களைப் பார்க்கும் போது நினிவேயின் நிழல் இந்தியாவின் மேல் படுவதைப் பார்க்க முடிகிறது. பிளேக் வியாதியினால் பலர் செத்து மடிந்தார்கள். லட்சக்கணக்கானோர் சூரத்பட்டணத்தை விட்டு இந்தியா முழுவதும் சிதறி ஓடினர். அவர்கள் ஓடிப் பதுங்கிய இடமெல்லாம் திகில் பிடித்தது. சில நாளாய் ஆகாய விமானங்கள் இந்தியாவில் இறங்க மறுத்துவிட்டன. இது தேவனின் நியாயத்தீர்ப்பாகும்.

எனவே தேவபிள்ளைகளே! நியாயத்தீர்ப்பை எடுத்து சொல்லி தேசத்தை எச்சரிக்கை செய்ய வேண்டியது அவசியம் தான். நினிவேயின் மனந்திரும்புதலுக்கு தேவ ஆவியானவர் கொடுத்த நியாயத்தீர்ப்பின் செய்தி தேசம் முழுமையும் இரட்சித்து

விட்டது. தேவனுடைய சபையே நீங்கள் எப்படிப்பட்ட செய்தியை எதிர்பார்க்கிறீர்கள் செழுமையின் உபதேசமா? அல்லது பரிசுத்த ஆவியானவரின் வெளிப்படுத்தல் செய்தியா? "கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன்" என்று அல்ல. கர்த்தாவே சொல்லும் அடியேன் கீழ்ப்படிகிறேன் என்று ஒப்புக்கொடுங்கள்.

## 2. *எச்சரிப்பின் செய்தி :*

எங்கள் கிளை சபையில் ஒரு மூப்பர் இருந்தார். அவர்கள் இப்பொழுது கர்த்தருடைய ராஜ்யத்தில் தேவனுடைய மடியில் இளைப்பாறுகிறார்கள். அவர்கள் உயிருடன் இருந்த நாட்களில் அடிக்கடி என்னை வந்து சந்தித்து வசனத்தின் வெளிச்சத்தைக் கேட்டு சந்தோஷப்படுவார்கள். தன்னுடைய ஆவிக்குரிய அனுபவங்களையும் என்னுடன் பகிர்ந்து கொள்வார்கள். அவர்கள் அடிக்கடி என்னுடன் கேட்டுக் கொள்ளும் காரியம் என்னவென்றால் பாஸ்டர் என்னிடம் ஏதாவது குறைவுகள் உங்கள் கண்களுக்கு தென்பட்டால் அல்லது ஆவியானவர் வெளிப்படுத்தினால் தயவு செய்து எனக்கு சுட்டிக் காட்டி எச்சரிக்கை செய்ய வேண்டும்.

வழியிலே பாம்பு படுத்திருக்கிறது. அல்லது உங்கள் வழியில் பள்ளங்கள் குறுக்கிடுகிறது என்று வரக்கூடிய ஆபத்தை எனக்கு நீங்கள் எச்சரிக்கை செய்தால் தான் ஆவிக்குரிய ஆபத்துகளுக்கு நான் தப்ப முடியும் என்று அவர் சொல்லுவார். இன்று தேவ ஜனங்களுக்கு எச்சரிப்பின் செய்தி கொடுத்தால் முகம் சுருங்கி விடுகிறது. முகம் கருத்து விடுகிறது. ஆனால் நினிவேக்கு தேவனுடைய இரக்கம் கிடைத்தது எச்சரிப்பின் செய்தியினால் தான். எச்சரிப்பைக் கேட்கும் போது மனதுக்கு கஷ்டமாக இருந்தாலும் நமது ஆத்துமாவுக்கு அதுதான் நல்லது. மனிதனுக்கு வரும் வியாதிகளுக்கு மருந்து சாப்பிடுகிறார்கள். அவைகள் இனிப்பதில்லை. கசப்பாகத்தான் இருக்கும். அதுவே வியாதியை நீக்கும். இதுபோலவே ஆத்துமாவில் சுகம் உண்டாக எச்சரிப்பின் செய்தியே பிரயோஜனப்படும்.

என் ஊழியப் பயிற்சிக் காலத்தில் சென்னையில் ஓர் பரிசுத்தவானின் கீழ் உதவி ஊழியராக இருந்தேன். அவர் எனக்கு அநேக எச்சரிப்புகளை புத்திமதியாக சொல்வார். அந்தப் பரிசுத்தவானின் எச்சரிப்புகள் அன்று முதல் இன்று வரை எனக்கு ஆசீர்வாதமாக இருக்கிறது.

நீதிமான் என்னைத் தயவாய்க்குட்டி என்னைக் கடிந்து கொள்ளட்டும். அது என் தலைக்கு எண்ணெயைப் போலிருக்கும். (அபிஷேகமாயிருக்கும்) என் தலை அதை அல்லத் தட்டுவதில்லை. (சங் 141:5) என்று தாவீது சொல்கிறார். இது போன்ற விசுவாசிகளாக ஊழியர்களாக நாம் காணப்படுவோமானால் நம்மூலம் எழுப்புதல் வந்துவிடும்.

ஏதேனில் தேவன் கொடுத்த முதல் செய்தியில் புத்திமதியும் எச்சரிப்பும் இருந்தது. ஆதி 2:17.

## *3. திட்ட வட்டமான செய்தி:*

நினிவேக்கு சென்ற யோனா தேவனிடமிருந்து திட்டவட்டமான செய்தியைப் பெற்றுச் சென்றார். இன்னும் 40 நாள் உண்டு. (யோனா 3:4) அப்பொழுது நினிவே கவிழ்க்கப்படும். யோனாவின் செய்தி திட்டவட்டமான செய்தியாய் இருந்தபடியால் நினிவேயின் ஜனங்கள் தம்தம் பொல்லாத வழியையும் தம் தம் கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பினார்கள். (3:8) திட்டவட்டமான செய்தி கூடிவருகிற எல்லோருக்கும் பிரயோஜனமாயிருக்கும்.

திட்டவட்டமான செய்தியைக் கேட்ட நினிவே மக்கள் ஆவியானவருடைய கிரியைக்குள் நடத்தப்பட்டார்கள். ஆழமான மனந்திரும்புதலுக்குள் சென்றார்கள். கர்த்தரின் வார்த்தை பரிசுத்த ஆவியானவரின் நிச்சயத்தோடு ஜனங்களைச் சென்றடையும் போது வல்லமை ஜனங்களுக்குள் இறங்கும் (Iதெச 1:5) இரட்சிப்பின் கிரியைகள் தானாகவே நடந்தது.

எப்படி இரட்சிக்கப்படுவது என்று நினிவே ஜனங்களுக்கு யோனா சொல்லிக் கொடுக்கவில்லை. தானாகவே இரட்சிப்பின்

கனியாகிய நீதியுள்ள வாழ்வு அவர்களுக்குள் மலர்ந்தது. நம் தேச சபைகளில் இப்படிப்பட்ட திட்டவட்டமான செய்தி ஒவ்வொரு வாரமும் தொனிக்கட்டும். நினிவேயில் உண்டான எழுப்புதல் தொடர்ந்து 100 ஆண்டுகள் பிரதிபலித்தது. திட்டவட்டமான ஒரே செய்தியின் ஆசீர்வாதம் 100 ஆண்டுகளுக்கு போதுமான தாயிருந்தது.

## *4. கர்த்தரின் செய்தி :*

யோனாவுக்கு முதலாவது கிடைத்த செய்தி நினிவேக்குப் போ! என்பதாகும். (1:2) யோனா எழுந்து தர்ஷீசுக்குப் போனார். இப்பொழுது இரண்டாந்தரம் கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. அதில் தான் நினிவேயின் முடிவு வெளிப்பாடாக யோனாவுக்கு கொடுக்கப்பட்டது. இன்னும் 40 நாளில் நினிவே கவிழ்க்கப்படும் என்பது தான் யோனாவுக்கு கர்த்தர் கொடுத்த செய்தி. யோனா எழுந்து கர்த்தருடைய வார்த்தையின் படியே போனான். 3:3

கர்த்தரின் செய்தி கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு கிடைக்குமானால் அவர்களுடைய வாழ்க்கையும், ஊழியமும் வளமாயிருக்கும்.

ஆற்றோரத்தில் ஊழியத்தை தொடங்கிய யோவான் ஸ்நானகன் தன் ஊழியத்தை முடிக்கும் போது ஏரோது ராஜாவின் அரண்மனையில் முடிக்கிறார். (மத் 3;13: மத் 14:4) வனாந்திரத்தில் ஊழியத்தை தொடங்கி பட்டணத்தில் ஊழியத்தை முடிக்கிறார். யோவான் ஸ்நானகனுடைய ஊழியத்தின் மேன்மைக்கு காரணம் அவனுக்கு கர்த்தருடைய வார்த்தையுண்டாயிற்று. லூக் 3:2.

## *5. தீர்க்கதரிசன செய்தி :*

நினிவேயின் இரட்சிப்புக்காக யோனா, கொடுத்த செய்தி தீர்க்கதரிசன செய்தியாகும். வரக்கூடிய செயலை முன்கூட்டியே அறிவிப்பது தான் தீர்க்கதரிசனமாகும். நினிவேக்கு வரப்போகும் அழிவுக்கு இன்னும் 40 நாட்களே உண்டு என்ற செய்தி தீர்க்க தரிசன செய்தியாகும்.

***தீர்க்க தரிசன செய்தியின் விளைவுகள் ஏழு***

1. தேவனை விசுவாசித்தார்கள்

2. உபவாசம் கூறினார்கள்

3. இரட்டு உடுத்திக் கொண்டார்கள்.

4. ராஜா இரட்டுடுத்தி சாம்பல் உட்கார்ந்தான்.

5.மனுஷர், மிருகங்கள் ஆடுமாடுகளும் தண்ணீர் முதற் கொண்டு குடிக்ககூடாது என்று கட்டளையிடப்பட்டது.

6.பொல்லாத வழியையும், கைகளின் கொடுமையையும் விட்டு மனந்திரும்ப ராஜாவும் பிரதானிகளும் தேசம் முழுமைக்கும் கட்டளையிட்டார்கள்.

7.தேவன் தீங்குக்கு மனஸ்தாபப்பட்டு அதைச் செய்யாதிருந்தார். (3:5-10)

இன்று நம்மிடையே உலாவும் தீர்க்கதரிசனங்களைக் கண்ணோக்கும் போது எவ்வளவாய் குறைவாய் இருக்கிறோம் என்பதை நாம் உணர வேண்டும். பொதுவாக என்னுடைய ஊழியத்திலே தீர்க்கதரிசனம் சொல்ல அதிகமாய் நான் உற்சாகம் கொள்வதில்லை. ஆனால் என்னுடைய செய்திகளே தீர்க்கதரிசனமாக இருக்கிறது என்று ஜனங்கள் உணர்கிறார்கள். நம்மிடையே தீர்க்கதரிசன வரம் கிரியை செய்ய வேண்டும். எங்கள் சபையில் தீர்க்க தரிசன வரம் பெற்றோர் உண்டு. தீர்க்க தரிசன வரத்தின் மூலம் பெருங்கூட்ட மனுஷர்கள் மனந்திரும்பியிருக்கிறார்கள். அபிஷேகம் பெற்றிருக்கிறார்கள். சபையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். எனவே நினிவேயில் உண்டாகும் எழுப்புதல் நம் பட்டணங்களில் தொடங்கி விட்டது. எனவே ஊழியக்காரர்கள் எல்லோரும் தீர்க்கதரிசன வரமுடையவர்களாய் தேசத்தில் இறங்குவோமானால் நம் இந்தியா சீக்கிரம் இரட்சிக்கப்பட்டு விடும்.

தீர்க்க தரிசனம் இல்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்

போவார்கள். தீர்க்க தரிசனங்களை அற்பமாய் எண்ணாதிருங்கள். தீர்க்கதரிசிக்கு செவிகொடுங்கள். அப்பொழுது சித்தி பெறுவீர்கள்.

## *6. வாய்க்கும் செய்தி :*

நீதிமான் செய்வதெல்லாம் வாய்க்கும் சங் 1:3 எத்தனை வாய்க்கும்? நூற்றுக்குநூறு வாய்க்கும். நம்முடைய செய்தி வசனமாக இருக்குமானால் நிச்சயம் வாய்க்கும். பதரை விதைக்காமல் விதையை விதைத்திருப்போமானால் நிச்சயம் வாய்க்கும். முளைக்கும், நூற்றுக்கு நூறு கனி கொடுக்கும்.

மாரியும் உறைந்த மழையும் வானத்திருந்து இறங்கி அவ்விடத்துக்கு திரும்பாமல் பூமியை நனைத்து அதில் முளை கிளம்பி விளையும் படிக்குச் செய்து விதைத்தவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது. எப்படியோ அப்படியே என் வாயிருந்து புறப்படும் வசனமும் இருக்கும். அது வெறுமையாய் என்னிடத்திற்கு திரும்பாமல் அது நான் விரும்புகிறதைச் செய்து நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும். (ஏசா 55:10,11)

யோனா தீர்க்கதரிசியின் செய்தி பதறாக இல்லை. கோதுமையாக இருந்தது. விதையாக, வசனமாக இருந்தபடியால் நினிவேயில் கர்த்தரின் செயல் நடந்தது. இந்த இந்திய தேசம் நம்மிடம் இதையே எதிர்பார்க்கிறது. இந்தியாவில் இப்படிப்பட்ட எழுப்புதல் நடக்க நம்மை ஒப்புக் கொடுப்போமா?

## *7. அறுவடை செய்தி :*

இச்செய்தியை நான் எழுதிக் கொண்டிருக்கும் போது 94 ஆம் ஆண்டின் இறுதி நாட்கள் வந்து விட்டது. தேவ சமூகத்தில் ஜெபித்து உபவாசித்து இந்த ஆண்டு அறுவடையை கணக்குப் பார்க்க தேவன் உதவி செய்தார். எங்களுடைய திருத்தங்கல் சபையில் மட்டும் 100 பேர் இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெற்று சபையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த 100 பேர் தான் எங்களுடைய அறுவடை.

ஆனால் நினிவேயில் நடந்த அறுவடையோ 1,20,000 பேர். ஓரே செய்தியில் ஒரு லட்சத்து இருபதினாயிரம் பேர் இரட்சிக்கப்பட்டார்கள். வருட முடிவில் வியாபாரிகள் இலாப நஷ்டக் கணக்குப் பார்ப்பார்கள். வருட முடிவில் கிடைக்கும் இலாபமே வியாபாரிகளின் அறுவடை. இன்று நம்முடைய சபைகளின், ஸ்தாபனங்களின், ஊழியக் கணக்கை பார்க்கும் போது கடந்த வருடம் ஊழியத்தில் எவ்வளவு பணம் செலவு செய்தோம் என்று கணக்குப் பார்க்கும் போது எத்தனை ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டார்கள்? என்றும் கணக்குப் பாருங்கள்.

நமது தேவைகள் சந்திக்கப்படுவது நமது இலக்கு அல்ல. தேசத்தின் தேவைகள் சந்திக்கப்படுவது நமது இலக்காக இருக்க வேண்டும். நம்மூலம் நம் பட்டணத்தின் தேவைகள் சந்திக்கப் படாவிட்டால் சுகபோகமாய் வாழ்கிறவன் உயிரோடே செத்தவன் I தீமோ 5:6 என்று தேவன் நம்மை சொல்லுவோர். அறுவடைக்கு வயல் நிலம் ஆயத்தமாயிருக்கிறது என்று நம் ஆண்டவர் சொன்ன நாட்கள் இந்த நாட்கள் தான். பட்டணங்களிலும், கிராமங்களிலும் பரிசுத்த ஆவியானவர் பலமாய்க் கிரியை செய்து கொண்டிருக்கிறார். அறுவடைக்கு ஆட்கள் தேவை.

சோம்பேறி குளிருகிறதென்று உழமாட்டான். அறுப்பிலே பிச்சை கேட்டாலும் அவனுக்கு ஒன்றுங்கிடையாது. (நீதி 20:4) உழுவது சுவிசேஷ ஊழியம். அறுவடை என்பது சபையின் ஊழியம். இன்று சபையில் அறுவடை நடக்க வேண்டுமானால் சபையானது சுவிசேஷ ஊழியம் செய்ய வேண்டும். கிராம ஊழியம் செய்ய வேண்டும்.

உழுகிறவன் நம்பிக்கையோடே உழ வேண்டும். அப்படியானால் அறுவடை செய்து போரடித்து பலன் பெற கர்த்தர் வழி நடத்துவார். I கொரி 9:10 போரடிக்கிற மாட்டை வாய் கட்ட வேண்டாம் என்பது கர்த்தரின் கட்டளை. எனவே அன்பு நண்பர்களே! ஊழியர்களே! நமது அறுவடையைக் கணக்குப் பாருங்கள். நம்முடைய ஊழியத்தின் மூலம் எத்தனை பேர்

இரட்சிக்கப்பட்டார்கள்? எத்தனை பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள்? எத்தனை பேர் உங்கள்மூலம் சபையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்?

யோனாவின் ஊழியம் இன்று நமக்குத் தேவை. நினிவேயின் எழுப்புதல் இன்று இந்தியாவில் நடக்க வேண்டும். இந்த வாஞ்சையில் தான் இப்புஸ்தகம் எழுதப்பட்டுள்ளது. தேவன் பட்சபாதமுள்ளவர் அல்ல. நினிவேயை அசைத்தவர் நம் தேசத்தையும் அசைப்பார்.

# 8. தீழ்ப்பான தீர்க்கதரிசி

ஒரு தேவ மனிதனுக்கு வரங்கள் முக்கியத் தேவையா? அல்லது கனிகள் முக்கியமா? என்றுகேட்டால் அநேகர் வரங்கள் முக்கியம் என்பார்கள். சிலர் மட்டும் கனிகள் முக்கியம் என்பார்கள். வரங்கள் 9 கனிகளும், 9 பரிசுத்த ஆவியானவர் நம்மில் இறங்கும் போது வரங்களும் செயல்படும். கனிகளும் காணப்படும். ஆனால் ஒரு தேவ மனிதன் வரங்களைப் பெருக்கிக் கொள்ள நினைத்தால் வரங்களைப் பெருக்கலாம். கனிகளை வளர்க்க நினைத்தால் கனிகளை வளர்க்கலாம்.

பொதுவாக நம்மிடையே இவைகளில் ஏதாவது ஒன்றை மட்டும் பற்றிக் கொள்வோரே அதிகம். ஆனால் இரண்டையும் பற்றிக் கொண்டு இரண்டையும் பெருக்க வேண்டும். வரங்கள் நம்மிடம் செயல்பட்டால் ஆத்துமாக்கள் பிரயோஜனப் படுவார்கள். ஆனால் நாம் பரலோக ராஜ்யம் செல்ல வேண்டுமானால் ஆவியின் கனிகளே அதற்கு அத்தியாவசியம்.

கனிகள் இல்லாமல் வரங்களை செயல்படுத்தினால் தேவ நாமம் துதிக்கப்படத் தக்கதாக காரியங்கள் சம்பவிக்கும். வரங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கும் போதே பிசாசின் வஞ்சகங்களும் உள்ளே செயல்பட்டு விடும். எனவே தேவ ஜனமே வரங்கள் பெற்றுக் கொள்ளுங்கள். கனிகளை அப்பியாசப் படுத்துங்கள்.

யோனா தீர்க்கதரிசி தேவ வரம் பெற்றவன் என்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால் நினிவேயில் 1,20,000 பேர் மனந்திரும்பினார்கள் என்றால் யோனா தேவ வரம் பெற்ற தேவதாசன் தான். ஆனால் பெரிய அறுவடையைக் கண்டிருக்கிற யோனாவின் ஆவிக்குரிய ஜீவியத்தை உறைகல்லில் உரசிப் பார்த்தால் அங்கு கொஞ்சம் கூட தெய்வீகம் இல்லை. தெய்வீகம் இல்லாத மனுஷன் வேதத்தை தூக்கிக் கொண்டு திரியக்கூடாது. விசுவாசியாய் இருக்கிறேன் என்று சொல்லி அநேகரின்

வீழ்ச்சிக்கும், இடறலுக்கும் வழி வகுக்கக்கூடாது.

கனியற்ற வாழ்க்கை ஆவிக்குரிய பாலைவனம், தீரமுள்ள தீர்க்கதரிசியின் வாழ்க்கை யோனா 4ஆம் அதிகாரத்தில் தீழ்ப்பாயிருக்கிறது. ஏழுவிதமான தீழ்ப்பு இருப்பதைக் காணமுடிகிறது. தீழ்ப்பானவைகளை விட்டு விலையேறப் பெற்றதை பிரித்து எடுக்க வேண்டிய தீர்க்கதரிசியே தீழ்ப்பாகி விட்டான். வேதனை! வேதனை!

என் அன்பு விசுவாசிகளே! ஊழியர்களே! ஆவியின் கனியில்லாமல் ஆவியின் வரங்களைப் பயன்படுத்தா திருங்கள்.

## *1. விசனம் :*

இது பரவலாக பல ஊழியர்களுக்கும், விசுவாசிகளுக்கும் உண்டு. பக்கத்து சபையில் 10பேர் இரட்சிக்கப்பட்டார்கள் என்று கேள்விப்படும் போது எத்தனைபேர் Praise the Lord என்று கர்த்தரை துதிக்கிறார்கள்? அதற்குப் பதிலாக அந்த ஊழியர் மீதும் உற்சாகமுள்ள சபையார் மீதும் புழுதியை அள்ளி வீசும் பொறாமைக்குணம் படைத்தோரே அதிகம் நம் தேசத்தில் உண்டு.

நினிவேயில் 120000பேர் மனந்திரும்பினது யோனாவுக்கு விசனமாயிருந்தது. ஒரு தேவ ஊழியனின் மனம் இப்படி யிருக்குமா? என்று நமக்கு வியப்பாயிருக்கிறது. நண்பர்களே முன்னேறிச் செல்லும் ஊழியருக்காய் தேவனைத் துதிப்போம். வளருகின்ற சபைக்காய் தேவனுக்கு மகிமை செலுத்துவோம். வரம் பெற்றவிசுவாசிகளை உற்சாகப்படுத்துவோம்.

மற்றவர்களின் ஊழிய வளர்ச்சியைக் கண்டு விசனப் படுவோமானால் அது காயீனின் ஆவி, மற்ற ஊழியரின் முன்னேற்றத்தைக் கண்டு விசனப்படுவோமானால் அது சவுன் ஆவி, எனவே மற்ற இடங்களில் தேவ ஆவியானவரின் கிரியைகளை அங்கீகரியுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

## *2. கடுங்கோபம் :*

தீர்க்கதரிசியின் தீழ்ப்பு கடுங்கோபமாகும். யோனாவுக்கு கோபம் உண்டானதற்கு காரணம் தன் தீர்க்கதரிசனம் நிறைவேறவில்லையே என்ற ஏமாற்றம் தான். தேவ ஜனங்களே! யோனா சொன்ன தீர்க்க தரிசனம் பொய்யல்ல. உண்மையைத்தான் சொன்னான். யோனாவும் உண்மையான தீர்க்கதரிசி தான். ஆனால் ஜனங்கள் மனந்திரும்பியதினிமித்தம் தேவன் அவர்களைக் கவிழ்த்துப் போடாமல் மன்னிப்பளித்தார்.

தீர்க்கதரிசியின் வார்த்தை நிறைவேறி விட்டால் தீர்க்கதரிசிக்கு மதிப்பும், கனமும் கிடைக்கும். நிறைவேறா விட்டால் ஜனங்கள் இகழுவார்கள். எனவே யோனாவுக்கு சுயமரியாதை தலைதூக்கியது. கடுங்கோபம் கொண்டார். அன்புப் பிள்ளைகளே! நமது நோக்கம் சரியாய் இருந்தால் கோபப்படமாட்டோம்.

பிரசங்க பீடத்திலேயே கோபப்படுவோர் உண்டு. யோனாக்களே உணர்வடையுங்கள். கோபத்தை நெகிழ்ந்து உக்கிரத்தை விட்டு விடுங்கள். மகிமையும் கனமும் நமக்கல்ல. கிறிஸ்துவுக்கே!

## *3. சாவை விரும்பினான் :*

சாவை விரும்பிய தேவ பிள்ளைகள் சிலர் வேதத்தில் உண்டு. மோசே, எலியா, யோனா போன்றோர் தேவ ஊழியத்திலே சாவை விரும்பினார்கள். இன்று விசிவாசிகளிலும் சிலர், காலத்துக்கு முன்னே மரிக்க விரும்புகிறவர்கள் உண்டு. என் பிராணனை என்னை விட்டு எடுத்துக் கொள்ளும். நான் உயிரோடிருப்பதைப் பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும் என்று சொன்னார். 4:3

யோனாவை விட நமக்கு மேன்மையான அபிஷேகத்தை தேவன் தந்துள்ளார். (யோவான் 16:7) புதிய ஏற்பாட்டு சபை சாவை எதிர்பார்த்து அல்ல: கர்த்தரின் வருகையை எதிர்பார்த்து ஜீவிக்க வேண்டும். *II* தீமோ 1:12 யோனா மீண்டும் சாவை விரும்பினார். 4:8.

நாம் மரித்தால் நமக்கு லாபம். நாம் பிழைத்திருந்தால் கிறிஸ்துவுக்கு லாபம். (பி 1:21) எனவே மரணத்தை விரும்புகிறவர்கள் சுயநலக்காரர்கள். பிழைத்திருக்கிற விரும்புகிறவர்களே கிறிஸ்துவுக்கு லாபம் தேடுகிறவர்கள் (பி 1:22,23) எனவே இந்த நிச்சயத்தோடு தொடர்ந்து ஜீவிப்போம்.

### *4. எரிச்சல்*

தீர்க்கதரிசியை தீழ்ப்பாக்கியது எரிச்சல். யோனாவின் எரிச்சலை எடுத்துப் போட தேவன் இடைப்பட்டார். ஆனால் யோனாவோ மரணபரியந்தமும் எரிச்சலாயிருக்கிறது நல்லது (4:4) என்றான். எரிச்சல் பொல்லாதது. எரிச்சல் மற்றவர்களுக்கு இடைஞ்சல் செய்யும். காயீனுக்கு எரிச்சல் வந்தபோது தம்பியை கொலை செய்தான். சவுலுக்கு எரிச்சல் வந்த போது தாவீதின் நெஞ்சுக்கு நேராக 25முறை ஈட்டியை எறிந்தார். (*Dakes Bible*).

பொல்லாப்புச் செய்ய ஏதுவான எரிச்சல் வேண்டாம் சங் 37:8. சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது. எபே 4:28.

### *5. எதிர்மாறான எதிர்பார்ப்பு :*

பின்பு யோனா நகரத்திருந்து புறப்பட்டு நகரத்துக்கு கிழக்கே போய் அங்கே தனக்கு ஒரு குடிசையைப் போட்டு நகரத்துக்கு சம்பவிக்கப் போகிறதை தான் பார்க்குமட்டும் அதின் கீழ் நிழல் உட்கார்ந்தான் (4:5) தீர்க்கதரிசியை தீட்டுப்படுத்திய ஐந்தாவது காரியம் எதிர்மாறான எதிர்பார்ப்பாகும்.

சாமி வரங்கொடுத்தாலும் பூசாரி வரங்கொடுக்க மாட்டார். என்று தமிழ்பழமொழி சொல்வது போல் தேவன் நினிவேயின் பாவத்தை மன்னித்து புதுவாழ்வு கொடுக்கிறார். ஆனால் யோனாவோ மன்னிக்கும் சிந்தையில்லாமல் நினிவேயின் அழிவை எதிர்பார்க்கிறார். இன்றும் நம்மிடையே சில யோனாக்கள் உண்டு. இவர்கள் கண்களில் பூதக்கண்ணாடியை அணிந்து கொண்டு பிறசபைகளை எப்போது உடையும்? அடுத்த

ஊழியர் மீது என்ன குற்றம் கண்டு பிடிக்கலாம் என்று அலைந்து திரிபவர்கள். குப்பையைக் கிளறி குன்னி முத்து கண்டு பிடிப்பவர்களும் உண்டு. தேவ ஊழியரே பூதக் கண்ணாடியை களைந்து விடுங்கள். எதிர்மாறான எதிர்ப்பார்ப்பு உங்களுக்கு வேண்டாம். தன் அயலான் மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக்காதவனே கர்த்தருடைய வருகையில் போக முடியும். (சங் 15:3)

## *6. மனமடிவு :*

ஐந்து விதமான தீழ்ப்புக்கு இடங்கொடுத்தவனை ஆறாவது காரியம் அட்டையைப் போல் வந்து ஒட்டிக் கொள்ளும் யோனா மனமடிவு அடைந்தார். (4:6) யோனா உணர்ச்சியினால் நடத்தப்பட்டார். *(Emotional Type)* ஆவிக்குரியவர்களுக்கும் உணர்ச்சிகள் உண்டு. *(Spirtual Type)* ஆனால் தீய உணர்ச்சிகள் ஆவிக்குரியவர்களை ஆளுகை செய்ய இடங்கொடுக்க மாட்டார்கள். மனமடிவு பல வியாதிகளைக் கொண்டு வரும். எனவே தேவ பிள்ளைகளே! தேவ ஊழியர்களே! கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை. (II கொரி 4:8) என்று பவுலைப் போல் ஜெயமடைவோமாக!

## *7. சோர்வு :*

நிழல் கிடைத்தவுடன் சந்தோசம், வெயில்பட்டவுடன் சோர்வு. இவர்களை என்னவென்று சொல்வது தொட்டால் சுருங்கிச் செடி தான். சூழ்நிலைகளைப் பார்த்து சந்தோசப்படுவதும் துக்கப்படுவதும் தேவ பிள்ளைகளின் இலட்சணம் அல்ல. தீர்க்கதரிசியைத் தீட்டுப்படுத்தின ஏழாவது காரியம் மனச் சோர்வு.

★ அப்பக் குறைவினிமித்தம் சோர்வு மத் 15:32

★ வியாதினிமித்தம் சோர்வு மாற் 9:18, 8:3

★ ஜெபத்திற்கு பதில் தாமதமானால் சோர்வு லூக் 18:1

★ ஆபத்துகள் வந்தால் சோர்வு நீதி 24:10

★ கர்த்தர் கடிந்து கொண்டால் சோர்வு எபி 13:5

என்று பலவகையான சோர்வுகள் தேவனுடைய பிள்ளைகளைத் தாக்கினாலும் பவுல் சொல்வதைக் கவனியுங்கள். இப்படிப்பட்ட ஊழியத்தை உடையவர்களாகிய நாங்கள் இரக்கம் பெற்றிருப்பதால் நாங்கள் சோர்ந்து போகிறதில்லை. II கொரி 4:1. அநேகருடைய ஸ்தோத்திரத்தினால் கிருபை பெருகிறபடியினால் நாங்கள் சோர்ந்து போகிறதில்லை. (IIகொரி 4:15,16) என்கிறாரே. தேவனுடைய பிள்ளைகள் சோர்ந்து போகக்கூடாது. யோனா தீர்க்கதரிசி சோர்ந்து போனார். சோர்ந்து போகாமல் நற்கிரியைச் செய்து மகிமையையும், கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு தேவன் நித்திய ஜீவனை அளிப்பார். ஆமென்.

## இந்நூலைப் பற்றி...

விசுவாசிகள் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக, உலக சிநேகம் என்ற மாயையாகிய மயக்க பூமியில் கிடந்தார்கள். இரட்சிக்கப்பட்ட பிற்பாடு, ஆவிக்குரிய சபையில் சேர்ந்த பிற்பாடும் சில மாயைகள், தேவ பிள்ளைகளை ஆவிக்குரிய மயக்கத்திற்குள் வீழ்த்துகிறது. இதற்கும் மேலாக ஊழியத்திற்கு அழைக்கப்பட்ட ஊழியக்காரனை வஞ்சிக்கின்ற மாயைகளும் உண்டு.

கிழக்கு திசையிலிருக்கிற நினிவேக்கு போகும்படி, யோனாவுக்கு தேவன் கட்டளையிட்டார். இவரோ மேற்கு திசையிலிருக்கிற, தர்ஷீசுக்கு ஓடிப் போனார். தேவ சித்தத்தை விட்டு வழி விலகிப் போகிறவர்களுக்கு, குறுக்கிடுகிற ஆபத்துகளை விளக்குவதே இந்த நூல். மாயை என்ற மயக்க பூமியை விட்டு வெளியேறி, தேவன் குறித்த இடத்திற்கு மீண்டும் வருவது எப்படி? என்று விளக்குவதே இந்நூல். பின்மாற்றத்தில் சென்ற தீர்க்கதரிசியையும் உயிர்ப்பித்து, ஆவியானவரின் வரங்களோடு பயன்படுத்தப்படுத்த தேவன் வல்லவர் என்று விளக்குவதே இந்நூல்.

### ஆசிரியரை பற்றி...

**சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான். ஏசா. 60:22**



என்ற வாக்குத்தத்தை தரிசனமாக பெற்று கர்மேல் பெந்தெகொஸ்தே சபையை ஸ்தாபித்து அதின் மூத்த போதகராக பணியாற்றும் இவர் கடந்த 34 ஆண்டுகளாக சபையின் மேய்ப்பராக, வேதாகம போதகராக, சபைகளை ஸ்தாபிக்கும் அப்போஸ்தலராக தேவனால் பயன்படுத்தப்படுகிறார்.

அகில உலகமும் பயணம் செய்து மத். 28:19ன் படி கிறிஸ்துவுக்கு சீஷர்களை உருவாக்க கருத்தரங்களில் போதித்து வருகிறார். ஆசிரியர் எழுதிய புத்தகமே உங்கள் கையில் தவழும் இப்புத்தகம் இவரின் புத்தக செய்திகள் உலகின் 85 நாடுகளுக்குள் கடந்து சென்று எழுப்புதல் தீயை பற்ற வைத்துள்ளது.

ஆக்கியோன்
**பாஸ்டர் மா. ஜான்ராஜ்**
**சீயோன் கோட்டை சர்வதேச ஊழியங்கள்**
26, D, காந்தி ரோடு, சிவகாசி - 626 123.
தமிழ்நாடு - இந்தியா.
போன்: 0091 - 4562 - 277209